விஷ்வவாணி

சமர்ப்பண்

Rs. 10/- | Vol. 35 - Issue 10 | October 2022

தேவ வேளைகள்

பருகப்போவது

2	சிந்தனைக்கு
3	நிர்வாக இயக்குநர் கடிதம்
7	சிறப்புக் கட்டுரை
10	ஓர் பிரார்த்தனை
11	திருமறை ஆய்வு
14	சின்னச்சின்ன உணர்வுகள்
18	அன்பின் பகிர்வுகள்
21	ஜெப ஒருங்கிணைப்பு கடிதம்
24	பணித்தளச் செய்திகள்
34	நடப்புச் செய்திகள்

OCTOBER - 22

விஷ்வவாணி சமர்ப்பண்

எமில் அண்ணனின்
சிந்தனை வரிகள்

- பிறந்தது முதல் கடைசி மூச்சு வரை
பாவத்தை வெறுத்துத் தள்ள,
இயேசுவை பற்றிக்கொள்ள
தேவ வேளைகள் உண்டு.
அதை நிராகரிக்க நிராகரிக்க
வேதனைகளே உண்டு.

- அறுப்பு வருவதற்கு
நாலு மாதங்கள் உண்டு,
ஆத்துமாக்களை சுதந்தரிப்பதற்கோ
இதுவே வேளை, இன்றே இரட்சண்ய நாள்!

- போத்திபாரின் மாளிகையில்
யோசேப்பிற்கு வேலையும் இருந்தது,
தான் கர்த்தருக்குச் சொந்தமானவன்
என்பதை நிரூபிக்கும் வேளையும் இருந்தது;
இன்றும் இந்த உலகில் விசுவாசிகளுக்கு
இவ்விரண்டும் உண்டு.

- தேவ வேளையை
பார்க்கமுடியாத கண்கள்
மங்கிப்போன கண்கள்,
பார்க்கும் கண்கள்
பொங்கி பிரவாகிக்கும் கண்கள்!

- எவனை விழுங்கலாம் என்று
வகைதேடி சுற்றித் திரிவது
பிசாசின் வேலை,
எவரையெல்லாம்
இயேசுவிடம் வழிநடத்தலாம் என்பது
விசுவாசிகளின் வேலை!

- தேவ வேளையை உணர்கிறவர்களுக்கு
பேழை திறந்திருக்கிறது,
உணராதவர்க்கு
பூமியிலும் வானத்திலும்
மதகுகள் திறந்திருக்கிறது.

விஷ்வவாணி சமர்ப்பண் பத்திரிகை தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு, மராத்தி, குஜராத்தி, ஹிந்தி, ஒரியா, பெங்காலி, ஆங்கிலம், சோரா, காக்போராக் ஆகிய 12 மொழிகளில் பிரதி மாதமும் வெளியிடப்படுகின்றது. ஆண்டு சந்தா ரூ. 100/-

பதிப்பு அலுவலகம்
1-10-28/247, ஆனந்தபுரம், குஷாய்குடா,
E.C.I.L. P.O, ஹைதராபாத் – 500 062
✆27125557. E-mail: samarpan@vishwavani.org

நிர்வாக அலுவலகம்
20, ராகுல் தெரு, T.M.P. நகர், புதூர், அம்பத்தூர்,
சென்னை - 600053. Ph: 26869200
E-mail: vishwavaninet@vishwavani.org; Website: www.vishwavani.org

கர்த்தரின் பணியில் கருத்துடன் இணைந்திருக்கும் உங்களுக்கு...

நிர்வாக இயக்குநரின் மடல்

சகலத்தையும் அதினதின் காலத்திலே நேர்த்தியாகச் செய்திருக்கும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் உங்களை அன்புடன் வாழ்த்துகிறேன்.

இந்நிதியாண்டின் முதல் ஆறு மாதங்களைக் கடந்துவர கர்த்தர் பாராட்டிய மிகுந்த தயவுக்காகக் கர்த்தருக்கு ஸ்தோத்திரம். நீங்களும் இப்பணிக்காகக் கிரமமாக ஜெபித்தும், உதாரத்துவமாகக் கொடுத்தும், தன்னார்வமாகப் பணியில் ஈடுபட்டும் வருவதற்காக அதிக நன்றி தெரிவிக்கிறேன்.

கர்த்தர்: என் ஜனங்கள் நான் அளிக்கும் நன்மையினால் திருப்தியாவார்கள்:

ஏற்ற வேளையிலே நமக்கு ஆகாரத்தைத் தந்து, நம்மை நன்மையால் திருப்தியாக்கி வழிநடத்திவரும் கர்த்தாதி கர்த்தரை நன்றியுடன் எப்பொழுதும் ஸ்தோத்திரிப்போமாக! நம்மேல் பாரஞ்சுமத்தினாலும் நம்மை இரட்சிக்கிற தேவன் அவரே என்பதை அனுபவப்பூர்வமாக ருசித்து வருகிறோம். பாரஞ்சுமந்து இளைத்துப்போன தமது ஜனங்களின் மேல் ''சம்பூரண மழையை'' பெய்யப்பண்ணி, தமது சுதந்தரத்தைத் திடப்படுத்துகிறவரும் அவரே!

ஒரு வேளை கர்த்தர் இரக்கஞ்செய்ய மறந்தாரோ? அவருடைய மகா பெரிய கிருபை முற்றிலும் அற்றுப்போயிற்றோ? இனி ஒருபோதும் தயைசெய்யாதிருப்பாரோ? (சங். 77:7-10) என்றெல்லாம் நினைத்து, கண்ணீர்விட்டு கலங்கவேண்டாம். உங்களுடைய கண்ணீரை அவர் தமது கணக்கில் வைத்து, ஏற்றவேளையிலே பிரதிபலன் தராமல் இருப்பாரோ? கர்த்தர் எழுந்தருளி, உங்கள் பட்சம் இரங்கி தயைசெய்யுங் காலமும், அதற்காகக் குறித்த நேரமும் வந்தது (சங்கீதம் 102:13) என்பதை விசுவாசியுங்கள். திக்கற்றவர்களுடைய ஜெபத்தை அலட்சியம் பண்ணாத கர்த்தர், உங்கள் விண்ணப்பத்தையும் கேட்டு, அங்கீகரித்து, உங்களை மேன்மேலும் ஆசீர்வதிப்பார்.

கர்த்தர் நமக்குப் பரிபூரண ஆரோக்கியம் வரப்பண்ணி, நம்முடைய காயங்களை எல்லாம் ஆற்றுவார்; சிறையிருப்புகள் மாறும்; முன்போல நம்முடைய வாழ்க்கை நிலைவரப்படும்; நம்மை வர்த்திக்கப்பண்ணுவார், மகிமைப்படுத்துவார், குறுகிப்போவதே இல்லை! ஒரு மேய்ப்பன் தன் மந்தையைக் காக்கும்வண்ணமாக அதைக் காப்பார். கர்த்தராலே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுமேயில்லை என்பதை மனதார விசுவாசிப்போம். கர்த்தர் நம்மைக் குறித்துச் சொன்ன எல்லா நன்மைகளையும் ஏற்ற காலத்தில் தீவிரமாய் நடப்பிப்பார். (எரேமியா 29:10,11; 30:17-19; 31:10-14; 32:17,27; 33:6-9).

இரட்சகர் இயேசுவின் நீடிய பொறுமை:

எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் பிதா சித்தமுள்ளவராயிருக்கிறார் (1 தீமோ. 2:4). இயேசுவின் இரண்டாம் வருகையும், நியாயத்தீர்ப்பும் தாமதமாகிக்கொண்டே இருக்கிறது. அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர்போலிருந்தார்; இப்பொழுதோ

மனந்திரும்பவேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளை யிடுகிறார் (அப். 17:30). எனவே, தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல், ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லோரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார் (2 பேதுரு 3:9).

1. கர்த்தர் சரியான நேரத்தில் செயல்படுபவர் (God is Punctual)

எல்லாவற்றிலும் ஒழுங்கையும், நேரத்தையும் கையாளுபவர் கர்த்தர். சரியான நேரத்தில் செயல்படுபவர். மிக முக்கியமான காரணம் இல்லாமல் கர்த்தர் ஒருபோதும் தமது செயலில் தாமதிப்பதேயில்லை. லாசரு வியாதியாயிருக்கிறான் என்று அறிந்தும், பின்னும் 2 நாட்கள் தாம் இருந்த இடத்திலேயே தமது ஊழியத்தைத் தொடர்ந்தார். லாசரு மரித்து 4 நாட்களானாலும் தமது வல்லமையால் உயிர்ப்பிக்க வல்லவர் என்பதை ஜனங்கள் விசுவாசிக்கத்தக்கதாக, இயேசுவின் தாமதம் அற்புதத்தைக் காணச் செய்தது (யோவான் 11:6,14,15,39,40,45).

2. கர்த்தர் நீடிய பொறுமையுள்ளவர் (God is Patience)

பாவத்தில் மரித்து, துன்மார்க்க ஜீவியம் செய்யும் மனிதர் மனந்திரும்ப போதுமான கால அவகாசத்தைக் கர்த்தர் கிருபையாய் அளிப்பதால், நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார். ஆனால் ஒருநாள், கர்த்தரின் பொறுமை தீர்ந்துவிட்ட நிலையில், அவர் பூமியை நியாயந்தீர்க்க வானத்திலிருந்து இறங்கிவருவார். பின்னர் மனந்திரும்புவதற்குச் சாத்தியமில்லாமையால் நித்திய கால எரிநரகத்திலே பங்கு நியமிக்கப்படும் (ஆதி. 6:5-7; 11-13; 7:7,15,16). எனவே, கர்த்தரின் பொறுமையையும், கிருபையையும் அலட்சியம் பண்ணவேண்டாம் (எபி. 10: 26,27). இன்றே என்றால் கிருபை; நாளை என்றால் நியாயத்தீர்ப்பு!

3. கர்த்தர் வாக்குத்தத்தம் செய்துள்ளார் (God has Promised)

உயிர்த்தெழுந்த இயேசு தமது சீடர்களையும், நான் பிதாவினிடத்திற்குப் போகிறேன்; நான் மீண்டும் வந்து உங்களை என்னிடம் சேர்த்துக்கொள்வேன் என்றும் வாக்குத் தத்தம் செய்துள்ளார் (யோவான் 14:18,28; 16:16,17,22; அப். 1:9-11). முதலில், இயேசு மேகங்களில் தோன்றி, மணவாட்டியாம் சபையைத் தம்முடன் அழைத்துக் கொள்வார். பின்னர் 7 ஆண்டுகள் மகா உபத்திரவத்தின் நாட்கள் நிறைவேறிய வுடன், இயேசு மிகுந்த மகிமையிலே வெளிப்பட்டு, சத்துருவாகிய சாத்தானை ஜெயித்து, ஆயிரம் வருடம் அரசாள்வார் என்பதாக வெளி. 19:11-21ல் வாசிக்கிறோம். கடைசிகால நிகழ்வுகளின் வரிசை எதுவாக இருந்தாலும் மனிதன் தன்னைப் படைத்த ஆண்டவரை முகமுகமாய்ச் சந்திக்கத் தன்னைப் பரிசுத்தத்துடன் ஆயத்தப்படுத்திக்கொள்வதே மிக முக்கியமானதாகும் (மத். 24:29-31; 42-44).

புதிய ஊழியர்களின் வளாகப் பயிற்சி:

ஒடிசா மாநிலத்தில் 34 எஸ்றாக்களும், ஆந்திர மாநிலத்தில் 24 மற்றும் உத்தரப் பிரதேசத்தில் 26 மொத்தம் 84 புதிய எஸ்றாக்கள் முழுநேரப் பணிக்கான பயிற்சி பெற்று வருகிறார்கள். அறியப் படாத சுமார் 400 கிராமங்களில் சுவிசேஷ தீபம் ஏற்றப்பட வாய்ப்பு பெற்றுள்ளோம். நீங்களும் உங்கள் ஜெபத்துடன் கூடிய மாத

ஆதரவுத் தொகை ரூ. 4000/- கொடுத்து ஒரு கிராமத்தைத் தத்தெடுப்பதின் மூலம் நற்செய்திப்பணியின் விரிவாக்கத்தில் பங்கடையமுடியும். குடும்பமாகவோ, குழுவாகவோ, திருச்சபையாகவோ முன்வாருங்கள் என அழைக்கிறோம்.

வடஇந்தியக் கிராமங்களில் ஆலயம் கட்ட நிலம் வாங்கவேண்டியது மிக அவசியம்:

மிஷனெரிப் பணியின் முக்கிய இலக்கு திருமுழுக்கு வைபவங்களும், திருச்சபைகள் நாட்டப்படுவதுமே என்பதை நாம் நன்கு அறிந்திருக்கிறோம். உங்களில் பலர் ஆலய கட்டுமானப் பணிக்காக உதாரத்துவமாகக் கொடுத்துவருவது மிக்க மகிழ்ச்சியைத் தருகிறது. இன்னும் பல இடங்களில் ஆலயக் கட்டுமானப் பணிக்காக 'நிலம்' வாங்கவேண்டியது மிக அவசியமாகவும், அவசர கால சூழ்நிலையாயும் உள்ளது. நிலம் வாங்குவதில் சிரமமும் கூட அதிகரித்துள்ளது. ஆலயக் கட்டடத்திற்கு நிலம் வாங்குவதற்கு இது ஓர் ஏற்ற வேளை! எனவே, தயவுகூர்ந்து தாங்கள் குறைந்தது ரூ. 100 ச.அடிக்கு ரூ.20,000/- அல்லது 50 ச.அடிக்கு ரூ.10000/- கொடுத்து உதவ பட்சமாய் வேண்டுகிறோம். எழுந்து கட்டுவோம் வாருங்கள் தேவ இராஜ்ஜியத்தை!

தரிசன விரிவாக்கப்பணிக்கு முழங்கால்களுடன் தியாகமாய் கொடுத்த உங்களை வாழ்த்துகிறோம்:

விஷ்வவாணி தரிசனப் பணியின் துரித செயலாக்கத்திற்கு அவசியமான மூலதனங்களை தாராளமாய் வாரி வழங்கும் இந்தியத் திருச்சபைகளின் ஈடுபாடுகளைப் பெற்று தேவனை உளமார துதிக்கிறோம். உங்களைப் போன்ற ஆர்வமான பணிப்பங்காளர்கள், உடன் ஊழியர்கள், தன்னார்வப் பிரதிநிதிகள், திருச்சபை தலைவர்களை அன்புடன் வாழ்த்தி, நன்றிகூறுகிறேன்.

கடந்த மாதங்களில் சென்னை பெருநகர் வட்டாரத்தில் 100 நாட்கள் சிறப்பு ஜெபங்களுடன் 100 நற்செய்திப்பணியாளர்கள் பங்குபெற்ற தரிசனக் கூடுகைகள் மிகச் சிறப்பாக ஆகஸ்ட் 6,7 தேதிகளில் வடசென்னை, கடலூர், விழுப்புரத்திலும், ஆகஸ்ட் 13ல் வேலூரிலும், 14 அன்று கிழக்குத் தாம்பரத்திலும் 15 அன்று சேத்துப்பட்டு MCC மேனிலைப்பள்ளி மற்றும் திருச்சி, தஞ்சை, கரூர், திண்டுக்கல், திருநெல்வேலி, கோவை போன்ற மாவட்டங்களிலும் இடம்பெற்றது. ஆயிரக் கணக்கான விசுவாசிகள் மிஷனெரி தரிசனங்களைப் பெற்றுக் கொண்டார்கள். 132 புதிய கிராமங்களில் சுவிசேஷ தீபம் ஏற்றப்பட வாய்ப்பு பெற்றோம். திருச்சபை போதகர்களின் நல் ஒத்துழைப்பைப் பெற்று விரிவாக்கப் பணியில் முன்னேறக் கர்த்தர் கிருபை பாராட்டினார்.

ஆகஸ்ட் 21 அன்று கோவை புதூர் CSI கிறிஸ்து நாதர் ஆலய ஜெபக் குழுவினரின் சார்பாக, அறியப்படாத 30 கிராமங்களுக்கு நற்செய்திப் பணியாளர்களை ஜெபித்து, அனுப்பிவைத்த Rev. வின்சென்ட், சேகர ஆயர் அவர்களுக்கும், கமிட்டி அங்கத்தினர்களுக்கும், பொறுப்பாளர்களுக்கும், உடன் ஊழியர்களுக்கும் மிகுந்த நன்றிபாராட்டுகிறேன். கர்த்தருடைய நாமம் மகிமைப்படுவதாக!

நித்தியத்திற்காகச் சேமிப்போம், சேகரிப்போம், சேர்ப்போம்:

"இயேசு மட்டுமே, என் நோக்கம் எல்லாமே; வேறு எதிலுமே எனக்கு இலாபம் இல்லையே" எனும் எமில் அண்ணனின் பாடல் வரிகள் "நித்தியத்திற்கு" எவ்வளவு முக்கியத்துவம் தந்துள்ளது என்பதைச் சிந்தித்துணரவேண்டும். அழிந்து போகிற

போஜனத்திற்காக அல்ல, நித்திய ஜீவன் வரைக்கும் நிலைநிற்கிற போஜனத்திற் காகவே கிரியை நடப்பியுங்கள் என்று இயேசு கற்பித்தார் (யோவான் 6:27)

எனவே, பிரியமானவர்களே, நித்திய நோக்கோடு ஜெபிக்கவும், தியாக ஈகைதனை கிரமமாகச் சேமித்து வழங்கவும் உற்சாகப்படுத்தப்படுகிறோம். அழிந்துபோகும் ஆத்துமாக்களையும் மந்தையில் இருந்து காணாமற்போன ஆடுகளையும் தேடி, ஒவ்வொன்றாய் சேகரிப்போமாக. தொழுவத்தில் உள்ள ஆடுகளுடன் தொழுவத்தில் இல்லாத மற்ற ஆடுகளையும் நித்திய ஜீவகரையில் சேர்க்க பிரயாசம் எடுப்போம். அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும், அல்லேலூயா!

விஷ்வவாணியின் நற்செய்திப் பணிகளுக்காக ஜெபிக்கும், சேமிப்புப்பெட்டியின் மூலம் உற்சாகமாகக் கொடுக்கும், கிராம நற்செய்திப் பணியில் மிஷனெரிகளைத் தாங்கி ஆதரிக்கும் மற்றும் உதாரத்துவமாக அள்ளிக்கொடுக்கும் நீங்கள் யாவரும் பாக்கியவான்கள், கர்த்தர் உங்களைக் கனம்பண்ணி ஆசீர்வதிப்பாராக!

மிஷனெரிப்பணி ஊழியர் குடும்பங்களின் நலன்:

இந்நிதியாண்டின் 5 மாதங்களில் ஊழியர்களின் குடும்பங்களுக்கு மருத்துவ உதவி யாக ரூ. 14,31,950/-ம் பணியின்போது இறந்துபோன ஊழியர்களின் மனைவி களுக்கான மாதாந்திர உதவித்தொகை 11,43,750/-ம் கணவனை இழந்து நிற்கும் குடும்பத்திற்கு ரூ. 2,25,000/-ம், இயற்கை பேரழிவில் உடமை, வீடுகளை இழந்த குடும்பங்களுக்கு நிதி உதவியாக 1,95,000/- மற்றும் மாநில அளவில் 90%க்கும் அதிகமாக மதிப்பென் பெற்றுள்ள நமது மிஷனெரி குழந்தைகளை ஊக்கப்படுத்தும் பரிசாக ரூ. 1,17,150/-ம் ஆக மொத்தம் ரூ. 31,12,850/- செலவுசெய்யப்பட்டுள்ளது. நமது கரிசனையுடன் கூடிய நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டுள்ளது.

A/C Name: **SOCIETY FOR CARE AND NEEDY** Branch: **Korattur, Chennai**
Bank: **STATE BANK OF INDIA** Branch Code: **17247**
A/C No.: **40170 153 077**
IFSC Code: **SBIN0017247**

இரசீது அனுப்புவதற்கு உதவியாக, தயவுகூர்ந்து தங்கள் முகவரியைத் தெரிவியுங்கள். ✆ 94 44 45 56 46

நீங்களும் 'சொசைடி ஃபார் கேர் அன் நீடி' என்கிற நமது அமைப்பின் மூலம் உதவிசெய்ய விரும்பினால், தாராளமாக முன்வந்து உதவிசெய்ய உங்களை அன்புடன் வேண்டுகிறோம். உங்கள் மூலம் மிகத் தேவையில் உள்ள குடும்பங்கள் ஆறுதல் மற்றும் ஊக்கம்பெறட்டும்.

சின்னவன் ஆயிரமும், சிறியவன் பலத்த ஜாதியுமாவான்;
கர்த்தராகிய நான் ஏற்றகாலத்தில் இதைத் தீவிரமாய் நடப்பிப்பேன். (ஏசாயா 60:22)

சென்னை
10.09.2022

W. வில்சன் ஞானக்குமார்
நிர்வாக இயக்குநர்

மாநில / பிராந்திய / மாவட்ட முகாம்களுக்காக ஜெபியுங்கள், ஆயத்தப்படுங்கள்

நாள்	பிராந்தியம்	முகாம் நடைபெறும் இடம்
அக்டோபர் 7-9	மத்திப தமிழகம்	குற்றாலம், தமிழ்நாடு
அக். 22-23	தூத்துக்குடி மாவட்டம்	குற்றாலம், தமிழ்நாடு
அக். 23-24	கன்னியாகுமரி, நெல்லை, தென்காசி	குற்றாலம், தமிழ்நாடு
அக். 24-26	இமயமலை ஜெபமுகாம்	மெந்தாபாரி, மே.வங்காளம்
அக். 14-16	கர்நாடகா மாநில முகாம்	ஹைதராபாத், தெலுங்கானா
அக். 28-30	மகாராஷ்டிரா மாநில முகாம்	ஹைதராபாத், தெலுங்கானா

காட்டுப் புறாக்களுக்கும், தகைவிலான் குருவிகளுக்கும்
வழிகாட்டும் முதன்மையான ஒன்று உண்டு!

காலம் எப்படிப்பட்ட காலம், நாட்கள் எப்படிப்பட்ட நாட்கள்,
சந்தர்ப்பம் எத்தனை சாதகமான சந்தர்ப்பம், நேரம் எத்தனை அவசரமான நேரம் –
தலைமை பொறுப்பில் இருப்பவர்
எத்தனை துடியாகத் துடிக்கவேண்டும் என்பதைத் தான்
மொர்தெகாய் எஸ்தருக்கு எடுத்துக் கூறினான்.

"நீ இப்படிப்பட்ட காலத்தில் மௌனமாக இருந்தால்"
அந்த நாரைகளை விட, காட்டுப் புறாக்களை விட,
தகைவிலான் குருவிகளை விட
மிகவும் பின்வாங்கினவளாக,
எஸ்தரே, நீ மாறிவிடுவாய் என்பதே
மொர்தெகாயின் செய்தி!

இசக்கார் புத்திரரைப்போல்
தேவ வேளையைப் பார்க்கிறோம்,
மக்கெதோனியரின் சத்தத்தை கேட்கிறோம்,
அறுப்புக்கு வயல்கள் விளைந்திருக்கிறதை காண்கிறோம்,
ஆவியானவர் உள்ளத்தில் பேசுவதை உணர்கிறோம்
என்று கூறும் "கர்த்தருடைய ஜனங்கள்" இந்த நாட்களில்
ஒன்றையே நினைப்பார்கள் அது சுவிசேஷ பிரபல்யமே!

ஒன்றையே நாடுவார்கள், அது சுவிசேஷ தீவிரமே!
ஒன்றையே செய்வார்கள், அது சுவிசேஷ ஊழியமே!
அப்படி நினைக்கிறவர்களை இயேசு நினைக்கிறார்
அப்படி நாடுகிறவர்களை பரிசுத்த ஆவியானவர் நாடுகிறார்
அப்படி செய்கிறவர்களை பிதாவானவர் கனம்பண்ணுவார்.

நிற்க.

தேவ வேளையை உணர்ந்தும், ஆவியானவருடன் ஒத்துழைக்காதவர்கள்
தங்களுக்கு கிடைக்கப்பெற்ற வாய்ப்புகளை, வசதிகளை, உபகரணங்களை,
தேவ வேளையை தீவிரிக்கச் செய்ய பயன்படுத்தாமல்
அலட்சியமாக இருந்தவர்களை
அந்த ஒரு தாலந்தை புதைத்துப் போட்டவன் போன்று நியாயம் விசாரிப்பார்.

"கர்த்தருடைய ஊழியத்தை அசதியாய்ச் செய்கிறவன் சபிக்கப்பட்டவன்;
இரத்தம் சிந்தாதபடிக்குத்
தன் பட்டயத்தை அடக்கிக் கொள்கிறவன் சபிக்கப்பட்டவன்"
என்று எரேமியா 48:10 கூறுகிறது.

ஆகாயத்தில் உள்ள நாரைகளைவிட, காட்டில் உள்ள புறாக்களைவிட,
தகைவிலான் குருவிகளைவிட
நாம்
கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வேளைகளை அறிவதில்
கூர்மை உள்ளவர்களாக,
பரிசுத்த ஆவியானவர் காட்டும்
எத்தியோப்பிய மந்திரிகளை, கொர்நேலியுக்களை கிட்டிச் சேர்ந்து,
விசுவாசத்திற்குள் கொண்டு வருவதில்
தீவிரம் உள்ளவர்களாக,
இயேசுவாகிய நியாயம் என்ற திறவுகோலை வைத்து
பிசாசின் கோட்டைகளை திறக்கிறவர்களாக,
இருளுக்குள் இருக்கிறவர்களை விடுவிக்கிறவர்களாக,
அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்களாக,
நீதி செய்கிறவர்கள் இன்னும் நீதி செய்கிறவர்களாக,
ஜெபத்தில் போராடுகிறவர்கள் மேலும் ஜெபத்தில் போராடுகிறவர்களாக,
பணத்தை கொடுக்கிறவர்கள் மேலும் கூட்டி கொடுக்கிறவர்களாக,
வசனத்தை பகிர்ந்துகொடுக்கிறவர்கள்
மேலும் அதிகமாக வசனத்தை பிட்டுக் கொடுக்கிறவர்களாக,
பரிசுத்தம் பெற்றவர்கள் மேலும் பரிசுத்தத்தில் கூடுகிறவர்களாக
நம்மை ஒப்புக் கொடுப்போம்!

கூடுதலாக எஜமானை தேடுவோம்!
கூடுதலாக எஜமானின் வேளைகளை பயன்படுத்துவோம்!
கூடுதலாக பலன்களை பெறுவோம்!

சவுல்

தேவ வேளை – அவன் கேட்காமல், தேடாமல், கீசின் மகன் கைகளில் வந்தது!
காணாமற்போன ஓர் கழுதையின் மூலம்
தேவ வேளையின் அறிமுகம் அவனுக்குக் கிடைத்தது!
பயந்து, ஒளிந்துகொள்ளும் கோழைக்கு செங்கோல் கிடைத்தது!
தேவாதி தேவனை மகிமைப்படுத்துவதற்கான வேளை
அந்த சாதாரண மனிதனுக்குக் கிட்டியது!

ஆனால் அவனையோ பெருமை என்ற விஷப் பாம்பு கொட்டியது!
அந்த விஷத்தை இறக்க சுரமண்டலங்களுக்கும் முடியவில்லை!

கர்த்தருடைய ஆவி அவனை விட்டு விலகியது!
பெருமையின் ஆவி நிரம்பியது!

சத்துருக்களை வேட்டையாட வேண்டியவன்
கிடைத்த வேளைகளை எல்லாம் பயன்படுத்தி
தாவீதை வேட்டையாடினான்,
வேட்டையில் தோல்வியுற்றான்.
ஓர் நாள் அவனது ஈட்டி
அவன் உயிரை குடிக்கும் வேளையே வந்தது!

பவுல்

அவனுக்கும் அவன் நினைக்காமல்
தேவ வேளை வந்தது!
தமஸ்குவின் பாதையில் வந்தது!

ஆசியாவையும், ஐரோப்பாவையும்
இயேசுவின் சுவிசேஷத்திற்குள்
அழைத்து வருவதற்கு அழைப்பின் வேளை வந்தது!

அந்த அழைப்பில், பெற்ற தரிசனத்தில்
உறுதியாக இருந்தான்; தடம் புரளவே இல்லை!

இரவை பகலாக்கி, உடலை ஓடாக்கி, கண்களை குளமாக்கி
எருசலேம் துவங்கி இல்லிரிக்கம் வரை
இயேசுவை பூரணமாக அறிவித்தான்.

தேவன் கொடுத்த வேளைகளில் ஒன்றைக்கூட வீணாக்காமல்
சந்தர்ப்பங்களை பயன்படுத்தினான்
திறந்த வாசல்களை சுதந்தரித்தான்
ஓர் நாள், "நல்ல போராட்டம் போராடினேன்;
தேவ வேளைகளை பயன்படுத்தினேன்;
விடை பெறுகிறேன்" என்றான்.

வாசிக்கும் நீங்கள்
ஒன்று சவுலாக இருக்க வேண்டும் அல்லது
பவுலாக இருக்கவேண்டும்
தீர்மானம் உங்களுடையது! ■

மிஷனெரிகள் பிரதிஷ்டை & கிராமத் தத்தெடுப்பு ஆராதனைகள்

இடம்	நாள்	தொடர்பு
30 மிஷினெரிகள் பிரதிஷ்டை *CSI சேகர ஆலயம்* *மூலச்சல், கன்னியாகுமரி*	**16 அக்டோபர் 2022** *ஞாயிறு மாலை 5:00 மணி*	9444343180
25 மிஷினெரிகள் பிரதிஷ்டை *CSI மறுரூப ஆலயம்* *திருமறையூர், தூத்துக்குடி*	**13 நவம்பர் 2022** *ஞாயிறு மாலை 5:30 மணி*	9485608490 9677796302

ஓர் பிரார்த்தனை

காலங்கள், வேளைகள், வாய்ப்புகள் என்பதை
அற்ப மனிதர்களாகிய எங்களுக்கு
தயவாக தருகிறவரே,
கிடைக்கப்பெறும் வேளைகளை
ஜெப வேளைகளாக மாற்றும் கிருபையை,
சுவிசேஷம் சொல்லும் வேளைகளாக
மாற்றும் ஞானத்தை,
கர்த்தருடைய சபையை கட்டும் வேளையாக
மாற்றும் இருதயத்தை,
தம்மால் தெரிந்துகொள்ளப்பட்ட அனைவருக்கும்
அருளவேண்டும் என்று ஜெபிக்கிறோம்.
லோத்து, சிம்சோன் போன்று
உலகம், மாம்சம் என்ற மயக்கங்களால்
கர்த்தருடைய வேளைகளை
பார்க்கத் தவறி விடாதபடி,
பின்னர் சோக முடிவுகளை கண்டுவிடாதபடி
யோசேப்பு, தானியேல் போன்று
பேதுரு, யோவான், யாக்கோபு போன்று
பரிசுத்த பவுல் போன்று
தூரப் பார்வைகளை தாரும்.
தொலைவில் தெரியும்
கர்த்தருடைய வேளைகளை
காணும் கண்கள் தாரும்.
அதற்கு கீழ்ப்படியும் இருதயத்தை தாரும்.
ஜனங்களை இயேசுவை அறியும் அறிவிற்குள்
கொண்டுவரும் அனுபவங்களை தாரும்.
வேளைகளை தவற விடாமல்,
சுவிசேஷ வேலையை செய்து,
ஓர் நாள்
தமது புன்முறுவலைக் காண
தயவுசெய்ய வேண்டுமென்று
அறுவடைக்கு எஜமானாகிய
இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம்,
ஆமென்.

வாழ்வு தந்தவர் இயேசு

ணமும் அந்தஸ்தும், செல்வாக்கும், சம்பத்தும் மனிதர் ஜீவியத்தை மகிழ்விப்பதில்லை என்பதை என் இருதயம் அறிந்து கொள்வதற்கு ஐந்து வருடங்கள் எடுத்தது! ஏனென்றால் அத்தனையும் என் கையில் இருந்தும் வருத்தமும் திகலும் இரவும் பகலும் என்னைத் துரத்தியது. வியாதியில் விழுந்தேன். விடுதலையின் பாதைக்கு என்னை நடத்தியது பரிசுத்த வசனங்களே; கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் மீட்பும் இரட்சிப்பும் உண்டு என்பது ஊழியர் ஹர்ஜீந்தர் சிங் மூலம் அறிய வந்தது. இன்று என்னைப் பெலப்படுத்தும் கிறிஸ்துவுக்குள் வாழ்கிறேன்; கிறிஸ்துவால் புதுஜீவன் பெற்றும் வாழ்கிறேன்; என்னில் கண்ட மாற்றத்தினால் என் வீட்டாரனைவருமே தேவ சமுகம் தேடுகிறார்கள்; ஆராதனையில் என்னுடன் வாஞ்சையுடன் பங்கெடுக்கிறார்கள்; கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

- ஆஷா ராணி

உங்கள் அன்பின் ஈகையினை ஆன்லைனில் அனுப்புவதற்கான வங்கி விபரங்கள்

Bank : State Bank of India
A/C No. : 10151750252
Branch : Amanjikarai, Chennai - India.
A/C Name: VISHWA VANI
IFS Code : SBIN0003273

இரசீது அனுப்புவதற்கு உதவியாக, தயவுசூர்ந்து தங்கள் முகவரியைத் தெரிவியுங்கள்.

Contact ✆ 94 44 45 56 46; Email: vishwavaninet@vishwavani.org

திருமறை ஆய்வு:

பரிசுத்த ஆவியானவரே வந்தருளும், நிரப்பியருளும்

– பொன் சுபர்சன்

பேதுரு, யோவான் ஆகியோர் மூலம் இயேசு செய்த அற்புதம், அவர்களை நற்செய்திப்பணியில் இன்னும் முன்னேறச்செய்தது என்று அப். 3ம் அதிகாரத்தில் சிந்தித்தோம். வல்லமைமேல் வல்லமை கொண்டு, தங்களை நாடித் தேடிவந்த யாவருக்கும் சத்தியத்தைப் போதிக்கத் துவங்கினர். இந்தத் தைரியம் – வாஞ்சை – விருப்பம் வரக் காரணம் என்ன? கர்த்தராகிய இயேசுவைப் பிறருக்கு சாட்சியாக அறிவிக்க நமக்கும் தகுதிகள் என்ன என்பதை அப். 4ன் வாயிலாகச் சிந்திப்போம்.

பேதுருவும் யோவானும் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டார்கள் என்பதே இங்கு முதலாவது நாம் பார்க்கும் காரியம். இங்குள்ள சூழ்நிலைகள் என்ன? அவர்கள் ஜனங்களுடனே பேசுகையில், ஆசாரியர்கள், தேவாலயத்துச் சேனைத் தலைவன், சதுசேயர் வந்து, அவர்கள் ஜனங்களுக்கு உபதேசிக்கிறதினாலும், இயேசுவை முன்னிட்டு, மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதலைப் பிரசங்கிக்கிறதினாலும், சினங்கொண்டு, பேதுரு, யோவானை காவலில் வைத்து மறுநாளிலே யூதத் தலைமைச் சங்கத்தில், அதாவது சனகெரிம் நடுவிலே அவர்களைக் குற்றவாளிகளாக நிறுத்தினர். அங்கே சுற்றி நின்றோர் அனைவருமே சமயத்தின் பெயராலே வலிமைமிக்கவர்கள், மரியாதைக்குரியவர்கள், சிந்தனையாளர்கள், எருசலேம் தேவாலயத்தைப் பாதுகாத்துக் கொண்டிருந்தவர்கள், அதிகாரங் கொண்டவர்கள். சில வாரங்களுக்கு முன்புதான் பேதுரு தான் கைதுசெய்யப்படுவேன் என்றுணர்ந்து, இயேசு கிறிஸ்துவை மறுதலித்தான் என்பதை நாம் மனதிற் கொள்ளவேண்டும்.

ஆனால் இங்கு வல்லமை நிறைந்தவனாக இயேசு கிறிஸ்துவை நீங்கள்தான் சிலுவையில் அறைந்தீர்கள் என்று வைராக்கியமாகப் பேசினான். "பேதுரு பரிசுத்த ஆவியினாலே நிரம்பிப் பேசினான்" (அப். 4:8). லூக்கா 12 :11-12; 21:12-15 ஆகிய வசனங்களிலும் இயேசு கிறிஸ்து தம் சீஷர்களுக்கு மிகத் தெளிவாகக் கூறினதைப் பார்க்கமுடியும். ஆம், பேதுருவின் தைரியம் பரிசுத்தாவியானவரால் உண்டானது.

அறிவு, திறமை, அதிகாரங் கொண்டு கர்த்தரின் பணியை ஒருவரும் செய்யவே இயலாது. பெந்தெகோஸ்தே நாளில் சீடர்கள் பரிசுத்தாவியினால் நிரப்பப்பட்டனர் (அப். 2:4; 4:32). அப்படியானால் பரிசுத்தாவியினால் நிரப்பப்படுகின்ற அனுபவம் தொடர் அனுபவம் என்று அறிகிறோம். இதைச் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டுமென்றால் 'நிரப்பப்படுதல்' என்று சொல்லும்பொழுது 'தேவனால் வழிநடத்தப்படுதல்', 'தேவனால் கட்டுக்குள்ளாக வைத்துக்கொள்ளப்படுதல்' என்று இதற்கு அர்த்தம்பெறமுடியும்.

ஏனென்றால் பிரதான ஆசாரியரும் சதுசேயரும் பொறாமையினால் நிறைந்தார்கள் (அப். 5:17). சபை விசுவாசிகள் ஆவியினால் நிறைந்தார்கள் என்று எபே. 5:18 கூறுகிறது. இவ்விரண்டையும் நாம் காண்கையில், நம் இருதயம் எதினாலே நிரப்பப்பட்டிருக்கிறதோ அதன்படியே நாம் வழிநடத்தப்படுகிறோம் என்பதை நாம் அறிந்துகொள்ளவேண்டும்.

இங்கு அப்போஸ்தலனாகிய பேதுரு பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்படும்போது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைக் குறித்து தைரியமாகச் சாட்சிபகர துவங்குவதைப் பாருங்கள். பரிசுத்தாவியினால் நிரப்பப்படும்பொழுது தங்கள் சுய சித்தத்தையல்ல, தேவ சித்தத்தின்படி செய்கிறவர்களாக விசுவாசிகள் மாற்றப்படுகிறார்கள்.

பரிசுத்த ஆவியானவரின் கட்டுப்பாட்டிற்குள் விசுவாசக் குடும்பங்கள் நடத்தப்பட வேண்டும் என்பதையே இப்பகுதி விளக்குகிறது. போதகர்கள், சபை குழுக்களின் சுயக் கட்டுப்பாட்டிற்குள் இயங்கும் சபைகள் இயேசு கிறிஸ்துவின் கட்டளைக்கு இடங்கொடுக்கத் தவறிவிடுகின்றன! பிரதான ஆசாரியர்களாக, சேனைத் தலைவர்களாக தங்களை முன்நிறுத்தி, பதவி, அதிகாரம், அந்தஸ்து என்று தங்கள் சுய சிந்தனைகளால் நிரப்ப விரும்புகிறார்கள். ஆனால் கிறிஸ்துவின் சாட்சிகளுக்கு அடிப்படை தேவை தூய ஆவியானவரின் நிரப்புதல் என்பதை ஒப்புக்கொள்ளும் விசுவாசிகள், சபை, சங்கங்கள் உலக அதிகாரங்களுக்கு அப்பாற்பட்டு இன்னும் தைரியமாக இயேசுவுக்குச் சாட்சியாக இருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.

இரண்டாவதாக இவர்கள் இயேசுவோடுகூட இருந்தவர்கள் (அப். 4:13). தைரியமாக, உரத்த சத்தமாகப் பேசின பேதுரு, யோவானைக் கண்ட யூத சமயத்தார் ஆச்சரியப்பட்டனர். ஏனெனில் பேதுருவும் யோவானும் கல்வியறிவில்லாதவர்கள், பேதைமையுள்ளவர்கள் என்பது அவர்களுக்குத் தெரியும்; முறையான கல்வி கற்காதவர்கள் – யூதத் தலைவர்களின்கீழ் முறையாக நியாயப்பிரமாணம் கல்லாதவர்கள் என்பதையும் அறிந்திருந்தார்கள். ஆனால் இவ்விருவரும் யாரை ஆச்சரியப்படுத்தினார்கள்? வேத கலாசாலைகளில் பட்டம்பெற்றவர்களை! பட்டம் பெற்றோர் முன் கைகட்டி நிற்கவேண்டிய – கல்வியறிவில்லாத பேதுரு, யோவானுக்கு முன் சூழ்ந்து நின்ற அவர்களால் இதை சற்றும் தாங்கிக்கொள்ள சக்தியில்லை!

அந்தக்ஷணமே அறிந்தனர் இவர்களுக்குள் இருக்கிறவர் வித்தியாசமானவர்; இவர்கள் இயேசுவைச் சார்ந்தவர்கள். ஏனென்றால் இயேசு கிறிஸ்துவும் இந்த யூத சங்கத்தினரிடம் மட்டுமல்ல, எங்கெல்லாம் சத்தியத்திற்கு விரோதமாகப் பேசினார்களோ அங்கே அதிகாரமுடையவராக இயேசு பேசினார் என்பதை அவர்கள் நன்கு அறிந்திருந்தார்கள். பரிசேயர், வேதபாரகர், நியாயசாஸ்திரிகளை இயேசு கிறிஸ்து நேரடியாகவே எதிர்த்தார் (லூக்கா 17:32-55).

நாம் இயேசுவோடு உண்டென்றால் சத்தியத்திற்குத் தூணாக மாறுவோம் என்று பரிசுத்த வேதம் நமக்கு எடுத்துரைக்கிறது. இன்றைக்கும் சாதாரண சுதேச சுவிசேஷ ஊழியர்களைக் கொண்டு கர்த்தர் செய்யும் பலத்த காரியங்களைக் கண்டு அநேகர் வியந்து பேசுவதும் உண்டு; எப்படி இது சாத்தியம் என்று மலைத்து நிற்கும் வேத பாரகர்களின் கூட்டமும் உண்டு! தங்கள் கல்வியறிவு, வாக்குப் புலமையினால் சாதிக்கத் துடிக்கும் பெரும்பாலானோர் சந்திப்பது கடும் தோல்வியையே!

இன்றைய கிறிஸ்தவ சமுதாயத்திற்குத் பிரதான தேவை: “பரிசுத்த ஆவியான வருக்குள் – இயேசு கிறிஸ்துவுடன்” என்பதே! அவருடன் நேரம் செலவிடும் போது அவரது இதயத்துடிப்பை அறிந்து, இயேசுவுக்குச் சாட்சியாக மாறமுடியும்! இன்னும் அத்யாவசியமானது என்ன என்பதை இனிவரும் இதழில் சிந்திப்போம்! ■

நித்தியமும் நித்தமும் மகிழ்வதாக!

மேற்கு வங்காளத்தின் ருகுன்பூர் தளத்தில் தேவாவியானவரின் அற்புதமான இடைபடுதல் காண்கிறோம். அறியாமையும் மன அமைதிக்கான பெருமூச்சும் அவ்விடத்து ஜனங்களைச் சோகத்தில் ஆழ்த்திய வேளையில் ஜீவ வசனங்கள் புதிய திருப்பம் தந்துள்ளது.

நற்செய்திப் பிரதிகளைப் பெற்றுக்கொண்ட குடும்பங்களுள் பிரியாங்கா கோஷ் வீட்டார் சமாதானப் பாத்திரமாய்த் திகழ்வதுடன், சமாதானத்தை கூறியறிவிக்கும் பணியிலும் தங்களை ஈடுபடுத்தி, கிறிஸ்துவின் நாமத்திற்குச் சாட்சி பகருகின்றது! அண்டை வீட்டார், உறவினர்களது உள்ளங்கள் மெய்யான வெளிச்சத்தில் தங்கவும், ஊழியங்கள் குக்கிராமங்களில் மேலோங்கவும் ஸ்தானாபதியாகக் கர்த்தர் பயன்படுத்தும் பிரியாங்கா குடும்பம் மூலம் ஜீவப் புத்தகம் புதிய பெயர்களை அநுதினமும் காணட்டும், பரலோகம் மகிழட்டும்! - ஊழியர் நிர்மல் பிஸ்வாஸ்

வாழ்க பாரத தேசம்

இந்தியாவின் 75வது சுதந்திர தினத்தில் தளத் திருச்சபைகளில் நடத்தப்பட்ட கொடியேற்றத்தைத் தொடர்ந்து சிறப்பு ஆராதனைகள் நடத்தப்பட்டு, தேசத்தின் ஜனங்களுக்காகவும் தலைவர்களுக்காகவும் ஜெபிக்கும் தரிசன தினமாக ஆகஸ்ட் 15 அநுசரிக்கப்பட்டது.

கிராமங்களின் சுபிட்சத்தைத் தடுக்கும் சதிகள் அகலவும், ஆசீர்வாதக் கதவுகள் அகலமாய்த் திறக்கப்படவும் ஏகோபித்து ஏறெடுக்கப்பட்ட விண்ணப்பங்கள் நிச்சயம் பெரும் பலனைப்

பாரத தேசத்திற்குத் தரும். குறிப்பாக பஞ்சாப் மாநிலத்தின் 250 கிராமங்களில் கொடியேற்றங்கள் கெம்பீரமாய் நடந்தேறிய பின்பு, மரக்கன்றுகள் நடுதல், இரத்த தான முகாம்கள் தொடர்ந்தன; வேத வினாப் போட்டிகள் ஆராதனைக் குழுக்களின் வசன ஆழங்களை அறிவதற்கென்று இடம் பெற்றன; கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் அன்பினால் பாரத கிராமங்களில் வளம் பெருகுவதாக! - ராகேஷ் குமார்.

மகிமைக்குள் பிரவேசித்தார்கள்

சென்னை-நேதாஜி நகர் சி.எஸ்.ஐ. கிறிஸ்து நாதர் ஆலயத்தின் சபை ஊழியர் திரு. ஜான் பீட்டர் ஐயா (வயது 78) அவர்கள் 8.9.22 அன்று மகிமைக்குள் பிரவேசித்தார்கள். தேவ ஊழியங்களை முன்னெடுப்பதில் மனோற்சாகத்துடனும் தேவ ஆலயத்தின் திருப்பணிவிடைகளில் மிகுந்த அர்ப்பணத்துடனும் ஊழியம் செய்து 'என்றும் கர்த்தாவுடன்' வாழும் அன்பு ஐயாவின் ஊழிய, ஜீவிய நாட்களை நினைத்து தேவனைத் துதிக்கிறோம். திருச்சபையின் குடும்பங்களுக்கும், வீட்டாரனைவருக்கும் தேவ ஆறுதல் உண்டாக ஜெபிக்கிறோம்.

ஆர்தர் மார்காஷிஸ்

இரண வைத்தியரே

அழகும் அமைதியும் படர்ந்து கிடக்கும் இங்கிலாந்தின் லெமிங்டன் பட்டணத்தில் நல்ல குடும்பத்தில் பிறந்து வளர்ந்து கல்வி கற்று, பின் மருத்துவராக மேல் படிப்பு படித்துக் கொண்டிருக்கும் போது நடந்த மிஷனெரி தரிசனக் கூட்டம் ஒன்றில் கேட்ட செய்தியினால் தொடப்பட்டு தன்னுடைய வாழ்வை ஒரு இளைஞன் அர்ப்பணித்தார்.

அக்கூட்டத்தின் செய்திகளும், சிந்தனைகளும், சம்பவங்களும், அவருடைய இருதயத்தை நொறுக்கவே உடனடியாக தேவையுள்ள அந்த மக்களுக்கு தன்னுடைய வாழ்க்கையை தியாகம் செய்ய அவர் முடிவு எடுத்தார்.

ஆனால் அந்த பணித்தளமோ இங்கிலாந்திலிருந்து பல ஆயிரக்கணக்கான மைல்கள் கடலில் கீழ்த்திசை நோக்கி பயணப்பட வேண்டிய ஒரு நாட்டில் அமைந்திருந்தது. பஞ்சங்களும் அறியாமைகளும் மூடநம்பிக்கைகளும் ஏழ்மையும் நோய்களும் பரவிக் கிடந்த அந்த பாவப்பட்ட தேசத்திற்காக பரிதாபப்படுவதற்கு அநேகர் இருந்தார்கள், ஜெபக்குறிப்புகள் எழுதிக் கொள்ள சில பேர் இருந்தார்கள், ஆனால் புறப்பட்டு வருவதற்கு எவரும் தயாராக இல்லை. இக் காலகட்டத்தில்தான் மருத்துவம் பயின்று கொண்டிருந்த அந்த இளைஞன் அக்கீழ்த்திசை தேசத்தின் திசை நோக்கி திரும்பினார்.

அவருடைய மருத்துவப் பட்ட மேற்படிப்பின் இறுதியாண்டு தேர்வுகளும், கற்க வேண்டிய பாடங்களும் தலைச்சுமையாக அவருக்கிருந்தது. ஆனால் கீழ்த்திசை தேசத்தின் குடிகள் கொத்துக்கொத்தாக அழிகிறார்களே என்கின்ற ஆன்மீக பாரம் அவரது இதயச் சுமையாக மாறிவிட்டிருந்தது.

இப்போது எந்தச் சுமையை இறக்கிவைப்பது என்னும் போராட்டத்தில், இதய பாரத்தை இறக்கி வைப்பதற்கே அவர் பிரயாசப்பட்டார். அந்த தூர கிழக்கு நாடாகிய இந்தியா என்னும் பெரும் துணை கண்டத்திற்கு தன்னை அர்ப்பணித்து விட்டார்.

மருத்துவப் பட்ட மேற்படிப்பு நிறைவடைய இன்னும் ஓராண்டு மட்டுமே இருக்கின்றது, நிறைவுசெய்துவிட்டால் ஒரு முழுமையான மருத்துவராக, இந்த உலகம் அங்கீகரிக்கும் ஓர் மதிப்புமிக்க மருத்துவராக திகழலாம் எனும் சரியான ஆலோசனைகளை ஆரூயிர் நண்பர்கள் வழங்கினார்கள். ஆலோசனைகள் சரிதான். ஆனால் தேவையின் அவசரத்தை புரிந்துகொள்ளும்போது அதை ஏற்பதா மறுப்பதா என்னும் போராட்டத்தில் அந்த இளைஞன் ஜெயித்தார்!

தன்னை நேசித்து அன்போடு ஆலோசனைகளைச் சொன்ன நண்பர்களை பார்த்து கூறினார் நான் முடிவு செய்வதற்கு இது எனது சொந்த வேலை அல்ல என்று.

கால்டுவெல

கனோன் ஆர்தர் மார்காஷிஸ் என்னும் அந்த மனிதர் இங்கிலாந்திலிருந்து புறப்படுவதற்குக் காரணமான மிஷனெரி தரிசனச் செய்தியை அளித்தவர் தென்னிந்தியாவின் இடையன்குடி பகுதியில் மிஷனெரியாகவும் பிஷப்பாகவும் ஊழியம் செய்து வந்த பிஷப் ராபர்ட் கால்டுவெல் அவர்களே!

சாதாரண மனித வார்த்தைகளினால் எவரும் தங்கள் இதயங்களை இயேசுவுக்கு கொடுத்துவிடுவதில்லை. கர்த்தருக்காக கனி நிறைந்த ஜீவியம்

செய்கின்றவர்களின் வார்த்தைகளே மற்றவர்களுடைய வாழ்க்கையை மாற்று கிறது. கனியற்ற ஊழியர்களின் சத்தங்கள் இன்றும் வெண்கலங்களாய் இவ்வுலகம் முழுவதும் எதிரொலிக்கின்றது, அவர்களுக்குப் பிரதிபலன் என்பதே இல்லை!

வாழ்நாள் முழுவதும் சுயநலத்தோடும் சுய பெருமைகளோடும் வாழ்ந்து சுகித்து, சதா மற்றவர்களை கசக்கிப் பிழிந்து, சோர்வடையச் செய்யும் எத்தனை பேர் இன்று சுவிசேஷ ஊழியத்தை கையில் எடுத்திருக்கிறார்கள் பாருங்கள். கண்களை உருட்டி தலையைத் துலுக்கி கைகளை முறுக்கி அடி வயிற்றிலிருந்து அலறும் அவர்கள் சத்தங்களுக்கு காணிக்கை பைகள் நிரம்பலாம். ஆனால் பரலோகம் நிரம்புவதில்லை.

22ம் நூற்றாண்டின் ஊழியப் போக்குகளை மிக நுட்பமாக ஆராய்ந்தால் பணத்தைக் கண்டுபிடித்து விட்டால் ஊழியம் சிறப்பாக நடந்து விடும் என்கின்ற ஒரு மாயத் தோற்றத்திற்குள் துணிகரமாக இறங்கும் மனப்பாங்கு அதிகரித்து விட்டதாகத் தெரிகிறது. பெரும் ஊழியங்களும், ஊழியர்களும் சரிந்து விழுவதற்கான முதல் படி இதுதான். ஆண்டவர் ஆரம்பித்து வைத்து, இன்று வரை கரம்பிடித்து நடத்துகின்ற எந்த ஊழியங்களும் விசுவாசத்தின் அடிப்படையிலேயே தான் இருக்க வேண்டும். ஆண்டவரை நெருங்கி, அவருடைய இதயத்திற்கு ஏற்ற ஜீவியம் செய்கின்ற நோக்கத்தையே பிரதானமாகக் கொண்டிருக்கவேண்டும். அப்போது அந்த ஊழியத்தை நடத்தும் அனைத்து அநுகூலங்களையும் தேவன் அள்ளிப்போடுவார் என்பதை எத்தனையோ செய்திகளில் ஆணித்தரமாக எமில் ஜெபசிங் அண்ணன் கூறியிருக்கிறதை பதிவு செய்திருக்கிறோம்.

ஹட்சன் டெய்லர் சொன்னார் பாருங்கள்: “தேவனுடைய சித்தப்படி செய்யப்படும் தேவ ஊழியத்திற்கு தேவைகள் சந்திக்கப்படாமல் இருந்ததே இல்லை என! (God's work done in God's way will never lack God's supply.) தேவன் தேவைகளை சந்திக்கிறவர், ஆசைகளை அல்ல.

ஆனால் இன்று ஆரம்ப ஜெபம் முதல் ஆசீர்வாத ஜெபம் வரை காணிக்கைகளை பற்றியும் பெரும் திட்டங்களைப் பற்றியும் பேசிவிட்டு, எந்த விதத்திலும் ஆவிக்குரிய பிரயோஜனமற்ற கூட்டங்களை நடத்த இவ்வுலகம் ஊழியர்களை உற்சாகப்படுத்திக் கொண்டே இருக்கின்றது. உபவாசங்களும் கண்ணீர்களும் அழுகைகளும் சந்தியா ஜெப நேரங்களில் அலறி ஜெபிக்கின்ற சத்தங்களும் குறைந்து, தனிமனித ஜீவியத்திற்கான முக்கியத்துவம் மறக்கப்பட்டு மழுங்கடிக்கப்பட்டுபோவது கூட வருகைக்கான ஒரு அடையாளமே! உணர்வற்ற நிலைமை!

சுவிசேஷ ஊழியம் என்றாலே கண்ணீர்தான்! தனி ஜெபம் மட்டுமல்ல, அரங்கம் நிறைந்த தரிசனக் கூட்டங்களிலும் அது என்று குறைகின்றதோ, அன்றோடு அந்த தரிசனங்களும் செயல்பாடுகளும் திசைமாறுகின்றன என்பதே மாபெரும் உண்மை. ஆதிவாசி கிராமங்களில் நடக்கும் நமது மேளாக்களிலும் கூடுகைகளிலும் இன்றும் அந்த முதல் தலைமுறை விசுவாசிகளின் கன்னங்களில் பெருக்கெடுத்து வழியும் கண்ணீர் பல தலைமுறை விசுவாசிகளாக இருக்கும் நம்மிடம் குறைந்துபோனது நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தின் பட்டுப்போன தன்மையை காட்டுகிறது.

சுவிசேஷ ஊழியம் என்றாலே பரிசுத்தம்தான். அதைத் தொலைத்துவிட்டு மற்றவர்களுக்குப் பந்தி வைப்பது என்பது மாயமாலம்தான். பந்தி வைப்பதற்கு முன்பதாக கரங்கள் கழுவப்பட வேண்டும், நகங்களுக்குள் இருக்கின்ற அழுக்குகள் எல்லாம் அகற்றப்பட்டாக வேண்டும். நம்முடைய கைகள் நிறைய கறையையும்

நகங்கள் நிறைய அருவருப்புகளையும் வைத்துக்கொண்டு மற்றவர்களுக்கு சுவிசேஷப் பந்தி பரிமாறினால் நாம் நோய் பரப்புகிறவர்களாகிவிட மாட்டோமா? கண்கள் குழி விழுந்து, கன்னங்கள் ஒட்டி, விலா எலும்புகள் புடைக்க இந்த சமுதாயம் பெரும் ஆன்மீகப் பசியோடு காத்துக்கிடக்கும்போது, ஜீவ அப்பத்தைப் பகிர்ந்து கொடுக்க வேண்டிய ஊழியர்கள் நாற்றம் எடுக்கிறவர்களாக, விரும்பத் தகாதவர்களாக மாறிக்கொண்டே வருவது ஆண்டவருடைய இதயத்தை எவ்வளவாய் வேதனைப்படுத்தும்?

கர்த்தரிடம் சொல்வதற்கு நம்மிடம் பல ஊழியங்கள் இருக்கலாம், சில பல சாதனைகள் இருக்கலாம், ஆனால் நான் உன்னை அறியேன் என்ற ஒரு பதில் நமக்கு நேராக நியாயத்தீர்ப்பாக கூறப்படும் என்றால், நம்முடைய நிலைமை என்ன என்பதை யோசிக்க வேண்டிய ஒரு முக்கிய புள்ளியில் இருக்கிறோம்.

100% சரியான ஊழியர்களோ ஊழியங்களோ சபையமைப்புகளோ இறையியலோ உபதேசங்களோ இல்லைதான். ஆனாலும் ஜீவனை நோக்கிய வழியில் அனுதின பரிசுத்தமும் முன்னேற்றமும் ஜெய ஜீவியமும் பொய்யற்ற வாழ்க்கையும் வேதத்தை கடைப்பிடித்தலும் அதற்கான வாஞ்சையும் குறைகின்றன எனும் போது ஒரு இரண சிகிச்சை நமக்கு அவசரத் தேவையாக இருக்கிறது. ஓர் கீலேயாத்தின் பிசின் தைலம் நமக்கு தடவப்பட வேண்டியது இருக்கிறது. ஒரு ரண வைத்தியனும் நமக்கு வைத்தியம் செய்தாக வேண்டியதிருக்கிறது.

'அக்கினி பிறப்பிப்பது அக்கினியாய் இருக்கும்' என்று லியானார்ட் ரேவன் ஹில் எழுதினார். தீ மட்டுமே தீயை உற்பத்தி செய்ய முடியும்! தீ தண்ணீரை உற்பத்தி செய்யாது.

அக்கினியாய் ஒளிர்ந்த கால்டுவெல்லின் ஒற்றைப் பிரசங்கத்தில் எழும்பிய அந்த ஒற்றை வாலிபன் இந்திய தேசம் வந்து குடிசைகளாலும் பனை மரங்களாலும் அரைகுறை ஆடை அணிந்திருந்த மக்களாலும் நிரம்பி இருந்த தமிழ்நாட்டின் அப்போதைய திருநெல்வேலி மாவட்டத்தின் சான்பத்து என்ற கிராமத்தை தத்தெடுத்துக் கொண்டார்.

பல்வேறு இடர்பாடுகளுக்கு மத்தியில் பரிசுத்த ஜீவியம் செய்து, ஆத்துமாக்களை கொள்ளைப்பொருளாகச் சம்பாதித்தார். வைக்கோல் படப்பில் தீப்பிடித்தால் பற்றி எரிவதைப் போல சுவிசேஷ தீ சுற்றிலுமிருந்த கிராமங்கள் அனைத்தையும் ஆட்கொண்டது. சான்பத்து 'நாசரேத்' ஆக மாறியது. இந்தியாவிலேயே சுவிசேஷ அறிவிப்பினால் மறுரூபம் கொண்ட பகுதிகளில் இன்று முதலிடத்தில் இருக்கின்றது. மிக அழகான கட்டடக்கலையில் மின்னும் மர்காஷிஸ் மேல்நிலைப்பள்ளி, பெண்கள் மேல்நிலைப்பள்ளி, லூக்கா பொது மருத்துவமனை, தொழிற்பயிற்சிப் பள்ளி, தலை நிமிர்ந்து நிற்கும் பேராலயம் என அழகின் சிகரமாக ஜொலிக்கிறது.

வட இந்தியாவில் இந்த சுவிசேஷ அறிவிப்பில் மாறிவரும் கிராமங்கள் சான்பத்து போல இருந்தாலும் நாளைய நாசரேத்துக்களாக மலர்ந்து கொண்டிருக்கின்றன என்பதை நம்முடைய கண்கள் இப்போதே கண்டுகொண்டிருக்கின்றது. ஆனால் இன்றைய கால்டுவெல்களாக நாளைய மர்காஷியஸ்களை எழுப்ப வேண்டிய நாம் ஜீவன் உள்ளவர்களா அல்லது நாடக நடிகர்களா என்பதை நின்று அவதானிக்க வேண்டிய நேரம் இது. ஒரு வருடத்தின் கடைசி பகுதிக்குள் காலடி எடுத்து வைக்கின்ற இந்த பொழுதுகளில் "தாவீதின் குமாரனே, எங்களுக்கு இரங்கும்" என்ற ஏக்கமே நமது அனுதின ஜெபம் ஆகட்டும். மாரநாதா! - ஹாரிஸ் பிரேம், விஷ்வவாணி மீடியா

தண்ணீரைத் தாண்டிய தளங்களில்...

திருச்சி மாவட்ட விஷ்வவாணி ஒருங்கிணைப்பாளர் கிங்ஸ் அருண்குமார் தலைமையில் 14 பேர் கொண்ட குழுவாக திருச்சியிலிருந்து ஆகஸ்ட் 10 அன்று புறப்பட்டு 12ம் தேதி ஒடிசாவின் விஷ்வவாணி பணித்தளங்களில் இறங்கும் வாய்ப்பைக் கர்த்தர் தந்தார். தளப் பயணம் என்பது இதுதான் எங்களுக்கு முதல் அனுபவம். 12ம் தேதி காலையில் பைன்ஸ்நாலி கிராமத்தில் கொட்டும் மழை நடுவிலும் அதிக உற்சாகமாய் விசுவாசிகள் ஆயத்தம் செய்திருந்த ஆலயப்பிரதிஷ்டை ஆராதனையில் பங்கேற்று புதிய விசுவாசிகளின் அன்பின் ஐக்கியம் பெற்றோம்.

13ம் தேதி தும்பிசாஹி கிராமத்தில் நடைபெற்ற ஆலயப் பிரதிஷ்டை ஆராதனையில் தேவ மகிமையும் தேவ அன்பின் பிரவாகமும் கண்டோம். அன்றைய தினம் கர்த்தர் நல்ல கால சூழ்நிலையைக் கொடுத்தார். அன்று மாலை, டாக்டர் கிரகாம் ஸ்டெயின்ஸ் அவர்களுடன் இரு சிறுமகன்கள் விதைக்கப்பட்ட இடத்தையும் பார்த்தோம். அவ்விடத்து மிஷனெரி ஒருவர் எங்களுடன் அந்த அகோர சம்பவத்தை விவரித்துக் கூறுகையில், கோதுமை மணிகளை நினைவுகூர்ந்தோம்.

14ம் தேதி போல்சாஹி எனும் கிராம ஆலயப் பிரதிஷ்டை நடைபெற்றது. நாங்கள் அங்கு செல்ல சாலை வசதிகள் எதுவுமில்லை. வாகனங்களை ஓரத்தில் நிறுத்திவிட்டு, ஆற்றைக் கடக்கவேண்டிய சூழ்நிலையில், அங்கிருந்த மக்கள் எங்கள் வருகைக்காக மூங்கில்களால் தற்காலிகப் பாலம் அமைத்திருந்தனர். வெள்ளம் அதிகமாகப் போய்க்கொண்டிருந்தது. அதன் மத்தியிலும் அதிக சிரமத்தோடு அந்தப் பாலத்தை அமைத்து எங்களை ஒவ்வொருவராக அதைக் கடக்கப்பண்ணினார்கள். நாங்கள் ஆற்றைக்கடந்த பின்னரும் அவ்வாலயம் செல்வதற்குச் சாலை வசதி எதுவும் இல்லை. மழை காரணமாக நடப்பதற்கு மிகச் சிரமமாகவே இருந்தாலும் கர்த்தர் தமது பாதுகாப்பைத் தந்து ஆலயப் பிரதிஷ்டையில் பங்கேற்கச் செய்தார்.

நாங்கள் திரும்பிவரும்போதோ இன்னும் அதிக வெள்ளம் அவ்வாற்றில் ஓடிக்கொண்டிருக்க, மிஷனெரிகளும் கிராமத்தாரும் நாங்கள் ஒவ்வொருவராகக் கடக்க எங்களுக்கு உதவிசெய்தார்கள்; பத்திரமாய் ஆற்றைக் கடந்தோம். ஒடிசா ஒருங்கிணைப் பாளர் சகோ. பெஞ்சமின்தாஸ் மூன்று நாள் ஆலயப் பிரதிஷ்டைகளிலும் எங்களோடு இருந்து ஜனங்களின் வாழ்க்கை, கலாச்சாரம், பண்பாடு, அவர்கள் விசுவாசத்தோடு கர்த்தரைப் பின்பற்றும் விதம் அனைத்தையும் எங்களுக்கு விளக்கிச் சொன்னார்கள்.

புதிய விசுவாசிகளைப் பார்த்தபோது அவர்களது வாழ்க்கைத் தரம் உயர்த்தப்படவும் அவர்களது ஆவிக்குரிய வாழ்க்கை வளரவும் நாங்கள் ஜெபித்தோம். மிஷனெரிகள் கடினமான சூழ்நிலையில் ஊழியம் நிறைவேற்றுவதை நேரில் கண்டதால், தொடர்ந்து அவர்களுக்காக ஜெபிக்கும் பாரத்தைக் கர்த்தர் கொடுத்தார். இன்னும் அதிகமாய் ஊழியங்களைத் தாங்கவும் கர்த்தர் இடைபட்டார். 14ம் தேதி இரவு அங்கிருந்து புறப்பட்டு 16ம் தேதி காலையில் திருச்சி வந்து சேர கிருபையளித்த கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

- பயணக் குழுவுடன் ஜான்சி பொன்னாட்ஷா.

அன்பின் பகிர்வுகள்

கர்த்தருக்குள்
எங்களுக்கு மிகவும் பிரியமான
சகோதர, சகோதரிகளே,

தேவ ஊழியத்தில் உங்கள் அயராத ஜெபங்கள், அதிசிறந்த ஈடுபாடுகளை மிகுந்த நன்றியுடன் நினைத்து, தேவனைத் துதிக்கிறேன். கிருபை, சமாதானம் உங்களது குடும்ப அங்கத்தினர்கள் அனைவருக்கும் இயேசுவின் நாமத்தில் பெருகுவதாக.

தரிசன எட்டுகளில் முன்னேற விழையும் எந்ததொரு பணியிலும் ஸ்தானாபதிகள் பெருகுவார்களென்றால், பணி வளர்ச்சி பன்மடங்காகும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. பரலோகில் மிகுந்த சந்தோஷம் – பூலோக ஜனத்தாருக்கு மனமகிழ்ச்சியைக் கொடுக்கும் சுவிசேஷ வேலையிலும் பிரதிநிதிகள் அதிமுக்கியம் வாய்ந்தவர்கள். மாவட்ட மற்றும் தாலுகாவாரியாகவும், வட்டார ரீதியாகவும் தேவ அன்பின் நிமித்தம் உழைக்கும் சகோதர, சகோதரிகளை நினைக்கும்போது உள்ளம் துதியினால் பொங்குகிறது! அவர்களது சந்ததி மேலோங்குவதாக!

தலைமைத்துவம் குறித்த சிந்தனைகளை வேதாகமத்தின் அடிப்படையில் கடந்த இரு இதழ்களில் கண்டோம்; வேதம் கூறும் மேலும் சில மேலான ஆலோசனைகளை அதன் தொடர்ச்சியாக இவ்விதழில் எழுதுவது நலமாய்க் கண்டது.

ஞானம்

'ஞானம்' எனும் பதம் 233 முறை வேதத்தில் உண்டு. கல்வியினால் பெறுவது அறிவு. தகுந்த விதத்தில் அறிவை பயன்படுத்த தேவன் தரும் கிருபை ஞானம். ஞானம் என்பது பகுத்தறிவது. சரியான முறையில் மதிப்பிடுவது. ஆவிக்குரிய, சன்மார்க்க காரியங்களைத் தெளிவுடன் முடிவு செய்வது ஞானமே.

சுமுகமாக, சிறப்புடன் வாழ்வை நடத்தத் தேவன் ஞானம் அருளுகிறார். நடைமுறைச் சிக்கலை வெற்றிகரமாக அணுகி, மீண்டு வர அவர் தரும் ஞானமே பிரதானம்! கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம் (நீதி 1:7). ஞானம் உன் இருதயத்தில் பிரவேசித்து, அறிவு உன் ஆத்துமாவுக்கு இன்பமாயிருக்கும்போது, நல் யோசனை உன்னைக் காப்பாற்றும் (2:10-11). முத்துக்களைப் பார்க்கிலும் அது விலையேறப்பெற்றது (3:15). ஞானத்தைக் கண்டடைகிற மனுஷன் பாக்கியவான் (3:13). முத்துக்களைப் பார்க்கிலும் ஞானமே நல்லது. இச்சிக்கப்படத்தக்கவை களெல்லாம் அதற்கு நிகரல்ல (8:11). ஞானத்தைச் சம்பாதி (4:5). ஞானமே முக்கியம் (4:7). நீ அதை மேன்மைபடுத்து. அது உன்னை மேன்மைபடுத்தும். நீ அதைத் தழுவிக் கொண்டால், அது உன்னைக் கனம்பண்ணும் (4:8). ஞானவான்கள் கனத்தைச் சுதந்தரிப் பார்கள் (3:35). பசும்பொன்னைப் பார்க்கிலும் ஞானத்தை அங்கிகரித்துக் கொள்ளுங்கள் (8:10). ஞானமுள்ளவன் பயந்து தீமைக்கு விலகுகிறான் (14:16). ஞானமுள்ளவன் பெலமுள்ளவன் (24:5) என்பது நீதிமொழிகளின் வசனங்கள்.

பரிசுத்த ஆவியும், ஞானமும் நிறைந்து நற்சாட்சி பெற்றிருக்கிற ஏழு பேரை

உங்களில் தெரிந்துகொள்ளுங்கள் (அப். 6:3). ஞானம் கேடகம், ஞானம் தன்னை உடையவர்களுக்கு ஜீவனைத் தரும். இதுவே அறிவின் மேன்மை. யுத்த ஆயுதங் களைப் பார்க்கிலும் ஞானமே நலம் (பிர. 9:18). ஒரு காரியத்தைச் செவ்வையாய்ச் செய்வதற்கு ஞானமே பிரதானம் (பிர. 10:10). கொலோசெ பட்டண விசுவாசிகளுக் குப் பவுல் அப்போஸ்தலனின் ஜெபம்: எல்லா ஞானத்தோடும்... நிரப்பப்படவேண்டும் (கொலோ. 1:9) எனும் வேத வசனங்களெல்லாம் ஞானத்தையே வலியுறுத்துகின்றன.

தீர்மானம்

மனித வாழ்வில் தீர்மானங்கள் தினமும் இன்றியமையாதது! தீர்மானம் எடுக்காதவர் யாருண்டு? மழை வந்தால் பள்ளிக்குப் பிள்ளைகளை அனுப்பவா வேண்டாமா என்பது துவக்கம், தினசரி அலுவல் வரை தீர்மான அடிப்படையிலேயே அனைத்தும்! முக்கியமானதை முதலில் செய்யவைப்பதும் தீர்மானமே! சரியான நேரத்தில் சரியான தீர்மானமெடுப்பது தலைவர் பணி! தரிசனம் பெற்றவர் தரிசனத்தை நிறைவேற்ற தீர்மானிக்க தவறும் பட்சத்தில், தரிசனம் சொப்பனமாக, கனவாக கலையும். தேவ சித்தம் அறிந்ததும் அதை நிறைவேற்ற தீர்மானிக்கவேண்டும்.

சோதோம் கொமோரா ராஜாக்கள் முறிந்தோடிப் போனார்கள் (ஆதி. 10:16). அங்குள்ள யாவரையும் எதிரிகள் சிறைப்பிடித்து, பொருட்கள் அனைத்தையும் பறித்துக்கொண்டனர். லோத்தும் அவன் பொருட்கள் யாவும் கொண்டுபோகப்பட்டது. தப்பியோடிய ஒரு எபிரெயன் ஆபிரகாமுக்கு அதை அறிவித்தவுடன் ஆபிரகாம் எதிரியைத் தன் ஆட்களுடன் போய் துரத்திப்பிடித்து தன் சகோதரனாகிய லோத்தையும் அவன் பொருட்களையும் திருப்பிக்கொண்டு வந்தான். சரியான நேரத்தில் தீர்மானம். அதனால் வெற்றி!

“விசுவாசத்தினாலே மோசே தான் பெரியவனானபோது பார்வோனுடைய குமாரத்தி யின் மகன் எனப்படுவதை வெறுத்து, அநித்தியமான பாவ சந்தோஷங்களை அனுபவிப்பதைப் பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அனுபவிப்பதையே தெரிந்துகொண்டு இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருந்தார்” (எபி. 11:24-26). மோசேயின் தீர்மானம் தந்த பலன் கானான் தேசம்.

தைரியம்

பெலன் சரீரத்திற்கும் தைரியம் மனதிற்கும் சம்பந்தம் கொண்டது. உடல் வளர்ச்சிக்கும் தைரியத்திற்கும் தொடர்பில்லை என்கிறது தாவீது - கோலியாத் சம்பவம்! ஆண் பெண் எனும் வித்தியாசமில்லை என்கிறது தெபோராள்-பாராக் ஜீவியம்! அதிக எண்ணிக்கையோ குறைந்த எண்ணிக்கையோ ஒரு பொருட்டல்ல; மீதியானியர், அமலேக்கியர், சகல கிழக்கத்தி புத்திரரும் வெட்டுக்கிளிகளைப் போல திரளாய் பள்ளத்தாக்கிலே படுத்துக் கிடந்தனர்; அவர்களுடைய ஒட்டகங்களுக்குக் கணக்கில்லை. கடற்கரை மணலைப் போலத் திரளாய் இருந்தது. அவர்களை எதிர்கொள்ள தைரியங்கொண்ட கிதியோனுடன் இருந்தது முன்னூறு பேரைக் கொண்ட 3 படை மாத்திரமே. கடினமான சூழ்நிலை, ஆபத்துக்காலத்தில் எவ்வித பயமுமின்றி, திடமாய் எதிர்கொள்ளச் செய்வது தைரியமே!

மார்டின் லுத்தர் கத்தோலிக்கத் திருச்சபையின் தவறான கொள்கைகளை எதிர்த்து, அரசர் முன்நிற்கும்போது, தனக்கு வரும் முடிவை அறிந்தும் தைரியமாய் எதிர்த்து நின்றாரே! தானியேல் சிங்கக் கெபியிலும், சாத்ராக் மேஷாக் ஆபேத்நேகோ அக்கினிச் சூளையிலும் நிற்கத் தைரியம் கொண்டனர்.

தலைவரது தைரியமே பின்பற்றுவோரை தைரியமாக இருக்கச்செய்யும் என்பதற்கு ஆதாரமாக எசேக்கியாவின் வார்த்தையைப் பாருங்கள்: "நீங்கள் திடன் கொண்டு தைரியமாயிருங்கள். அசீரிய ராஜாவுக்கும் அவனோடிருக்கும் ஏராளமான கூட்டத் திற்கும் பயப்படாமலும் கலங்காமலும் இருங்கள். அவனோடிருக்கிறவர்களைப் பார்க்கிலும் நம்மோடிருக்கிறவர்கள் அதிகம். அவனோடிருக்கிறது மாம்ச புயம். நமக்குத் துணைநின்று நம்முடைய யுத்தங்களை நடத்த நம்மோடிருக்கிறவர் நம் தேவனாகிய கர்த்தர்தானே (2 நாளா. 32:7,8) என்று அவர்களைத் தேற்றினான்.

யார் தைரியமாக இருக்கமுடியும்? தங்கள் தேவனை அறிந்திருக்கிற ஜனங்களே; இயேசுவை அறிந்து அவரைத் தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொண்டவர்களே!

சுய நலமில்லாமை:

சுயநலம் வெறுத்து, சுயலாபம் எதிர்நோக்காதவர்களே சிறந்த தலைவர்கள். தான், தனக்கு என்ற எண்ணமின்றி, எஸ்தரைப் போன்று 'தன் ஜனம்' என்று ஆலோசிக்கும் போது பெரியதொரு இரட்சிப்பு உண்டு. சுயமாய்ப் பேசுகிறவன் தன் சுயமகிமையைத் தேடுகிறான். தன்னை அனுப்பினவரின் மகிமையைத் தேடுகிறவனே உண்மையுள்ளவனாயிருக்கிறான், அவனிடத்தில் அநீதியில்லை (யோவான் 7:18).

மனத் தாழ்மை:

முதன்மையான ஆசனம், விளம்பரம் விரும்பும் தலைவர்கள், தங்களைப் பற்றிப் பெருமையாய் பேசுவர். ஆனால் தேவன் பார்வையில் மனத் தாழ்மை கொண்டவன் உயரிடத்தைப் பெறுகிறான். தாவீது தன்னை ஒரு செத்த நாயாக, தெள்ளுப்பூச்சியாக தாழ்த்தி, உயர்வு கண்டான். மனத்தாழ்மையுடையவனோ கனமடைவான் (நீதி. 29:23). உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங் களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன். உங்களில் எவனாகிலும் முதன்மை யாயிருக்க விரும்பினால் அவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன் (மத். 20:26-27). அவர் பெருகவும், நான் சிறுகவும் வேண்டும் (யோவான் 3:30).

நான் அப்போஸ்தலர் எல்லோரிலும் சிறியவனாயிருக்கிறேன். தேவனுடைய சபையைத் துன்பப்படுத்தினதினாலே நான் அப்போஸ்தலனென்று பேர் பெறுவதற்குப் பாத்திரன் அல்ல (1 கொரி. 15:9). பரிசுத்தவான்கள் எல்லாரிலும் சிறியவன்... (எபே. 3:8). பிரதான பாவி நான் (1தீமோ. 1:15) என்கிறார் பவுலடியார்.

அமெரிக்காவின் உள்நாட்டுப் போரின்போது அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் தரைப்படை அலுவலர் மெக்லைனை அதிகாரியாகப் பதவிப்பிரமாணம் செய்துவைத்தார். 6 மாதங்களாகியும் யுத்தம் தீரவில்லை ஆதலால் மெக்லைனை சந்திக்க அவர் வீட்டிற்குச் சென்று காத்திருந்தார் அதிகாரிகளுடன். வீடு திரும்பிய மெக்லைன் தன் மேலறைக்குப் போய் தூங்கிவிட்டார். காத்திருந்த அதிகாரிகள் கோபமடைந்தாலும், லிங்கன் கூறினார்: 'அமெரிக்கா மெக்லைனால் நன்மை பெறுமென்றால் அவரைக் குதிரை மீதமர்த்தி கடிவாளத்தைப் பிடித்து நடத்தவும் நான் தயார்'. லிங்கனின் மனத்தாழ்மை அவரை உலகிற்கு பெருந்தலைவராகக் காட்டியது.

அன்பிற்குரியவர்களே, கிறிஸ்துவின் சுவிசேஷப் பணியின் பொறுப்பாளர்கள் மேற்காணும் தகுதிகளில் நாளும் தங்களை வளர்த்துக்கொள்ளுவது அவசியம்! தேவன்தாமே தம் மகிமைக்காய் இந்த கிருபையை தந்து நம்மை முன்நடத்துவாராக.

ஹைதராபாத் — கர்த்தரின் பணியில்
08.09.2022 — P. செல்வராஜ், Chairman, Vishwa Vani Network

என்னுடைய வேளை இன்னும் வரவில்லை

- அருள்திரு. இம்மானுவேல் தானராஜ், இயக்குநர் - ஜெப ஒருங்கிணைப்பு

நமது ஆண்டவராகிய இயேசுவுக்கும் அவருடைய சகோதரர்களுக்கும் இடையிலான உரையாடலை யோவான் தனது 7ம் அதிகாரத்தில் குறிப்பிடுவதைப் பாருங்கள். யூதர்களுடைய கூடாரப் பண்டிகை நாட்களில் எருசலேமில் பெருங்கூட்டம் கூடியிருக்கும். பல்வேறு இடங்களிலிருந்து மக்கள் திரள் திரளாய் வந்திருப்பார்கள். இயேசு பிரபலமாக விரும்பிதான் அற்புத, அடையாளங்களைச் செய்கிறார் என்று அவருடைய செயல்களில் பொறாமை கொண்ட தம்பிமார், நீர் இப்பொழுது பண்டிகைக்கு யூதேயாவுக்குப் போம், அங்கு உமக்குப் புகழ் கிடைக்கும் என்கிறார்கள். இயேசு அவர்களைப் பார்த்து 'என் வேளை இன்னும் வரவில்லை' என்பதோடு உங்கள் வேளையோ எப்பொழுதும் ஆயத்தமாயிருக்கிறது என்றார் (யோவான் 7:6). 'என்னுடைய வேளை', 'உங்களுடைய வேளை' என்று இரண்டாகப் பிரித்து இயேசு கூறுகிறார். இயேசு தம்முடைய வேளை என்று குறிப்பிடுவது என்ன என்பதைச் சற்று வேதத்திலிருந்து ஆராய்ந்து பார்க்க முயற்சி செய்வோம். தேவனுடைய நேரம், மனிதனுடைய நேரம், இவ்வுலகத்தின் அதிபதியின் நேரம் என்று பல கோணங்களில் இதைப் பார்க்க முடிகிறது. முதலாவது தேவனுடைய வேளையை நாம் பார்ப்போம்.

தேவன் எவ்வளவு பெரியவர் என்றும் அவருடைய திட்டங்கள் ஆராய்ந்து முடியாதது என்றும் கடந்த முறை படித்தோம். நாம் அறிந்துகொள்ள முடியாத தேவ திட்டங்கள் உண்டு. நாம் அறிந்துகொள்ளக்கூடிய தேவ திட்டங்களும் உண்டு. அதைவிட நாம் அறிந்துகொள்ளவேண்டிய கட்டாயமான தேவ திட்டமும் உண்டு. பாவத்தில் வாழும் மனிதன் மறுபடியும் பிறக்கவேண்டும்; அதற்கு இரட்சிப்பின் தேவதிட்டமாகிய இயேசு கிறிஸ்து கல்வாரியில் இரத்தம் சிந்தி சம்பாதித்த இரட்சிப்பை, பாவ மன்னிப்பை மனிதர்களாகிய நாம் இரு கை ஏந்தி ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பது முக்கியமான தேவ திட்டம். ஒருவரும் கெட்டுப்போவது தேவசித்தமல்ல என்று தெளிவுபடுத்தும் வேதம் அதற்கான கால கணிப்புகளையும் திட்டம்பண்ணி இருக்கிறது. அவருடைய அநாதித் தீர்மானம் என்று கூறுகிறோமே, அதற்கு எந்த எந்தக் காலத்தை வரையறுப்போம். 'ஆதியிலே' தேவன் வானத்தையும் பூமியையும் படைத்தார் என்று தொடக்கம் இல்லாதவர், தொடக்கத்திற்கு முன் இருந்தவர் படைப்புகளைத் தொடங்கி வைப்பதை வேதப் புத்தகத்தின் முதல் வசனமாகப் பார்க்கிறோமே.

விஞ்ஞானத்தில் தேவனுடைய வேளைகள்:

இன்றைய விஞ்ஞானமும் ஆராய்ச்சிகளும் அறியமுடியாதவற்றை ஆராய்ந்து கண்டுபிடிப்புகளை வெளியிட்டுக்கொண்டே இருக்கிறது. அவை தேவன் இருக்கிறார் என்பது மட்டுமல்ல, அவர் யுகாயுகமாக ஜீவித்து அரசாளுகிறார் என்றும் தெளிவுபடுத்துகிறது. சில விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளை உற்றுப்பாருங்களேன். கணிதம் இக்கண்டுபிடிப்புகளுக்கு உயிர்நாடியானது. நாம் கணிதப்பாடம் படிக்கும்போது, அதில் ''காலமும் தூரமும்'' என்று ஒரு பாடத்தைப் படித்தது நினைவிருக்கவேண்டும். இல்லாவிட்டால் ஒரு குறிப்பைக் கவனியுங்கள். நெடுஞ்சாலையில் நாம் பயணிக்கும்போது 100 கி.மீ. வேகத்தில் மூன்று மணி நேரம் தடையின்றி பயணித்தால் 300 கி.மீ. தூரத்தை எட்டிப்பிடிக்க முடியும் என்பது

கணிதம். இதை மனதில் கொண்டு இயற்கையைச் சற்று எட்டிப்பாருங்கள். நாம் காணும் சூரியன் ஏற்கனவே 900 முதல் 1000 கோடி ஆண்டுகள் எரிந்துவிட்டதாகவும் இன்னும் 500 கோடி ஆண்டுகள் எரிந்து தன் வெப்பம் இழக்கும் என்று கணக்கிடப்படுகிறது.

இது தேவனுடைய காலம் சம்பந்தப்பட்டது பிரியமானவர்களே! சூரியனுடைய ஒளி பூமிக்கு வந்து சேர 8.3 நிமிடங்கள் எடுக்கிறது என்றும், சந்திரனுடைய ஒளி பூமிக்கு வந்து சேர 1.5 நிமிடம் எடுக்கிறது என்றும் கணக்கிடப்படுகிறது. அது மட்டுமல்ல, ஜூபிடரிலிருந்து ஒளி வந்து சேர 35 முதல் 52 நிமிடம் என்றும், புளூட்டோவிலிருந்து 5.3 மணி நேரம் என்றும் கணக்கிடுகிறது. பூமிக்கு மிக அருகில் உள்ள நட்சத்திர மாகிய பிராக்சிமா சென்டாரி மற்றும் ஆல்பா சென்டாரி ஆகிய நட்சத்திரங்களின் ஒளி பூமியை அடைய முறையே 4.24, 4.3 வருடங்கள் ஆகிறது என்று கணக்கிடப் பட்டுள்ளது. ஆனால் இந்த ஒளியின் வேகம் என்பது மணிக்கு 108 கோடி கி.மீ. கணக்கிட்டுப்பாருங்கள். இன்றும் மனிதன் தொலைநோக்கி மூலம் கண்டுள்ள - அதி தூரமான நட்சத்திரம் 'விடிவெள்ளி' என்றும் அதன் ஒளி நம்மை அடைய 2800 கோடி ஒளி ஆண்டுகள் என்றும் கணிக்கப்பட்டுள்ளது. ஒரு ஒளி ஆண்டு என்பது ஒன்பது லட்சத்து நாற்பத்தாறாயிரத்து நூறு கோடி கி.மீ. ஆகும். அப்படியானால் தேவனுடைய காலங்களைக் கணக்கிடுவது என்பது மனித சிந்தைக்கு அப்பாற்பட்டது. ஆனால் அப்படி அநாதி காலமாய் இருக்கும் தேவன் நம் சரித்திரத்தைத் திட்டம் பண்ணி எல்லாவற்றிற்கும் நாள் குறித்திருக்கிறார் என்பது ஆச்சரியம் அல்லவா. இராசிகளை அதினதின் காலத்திலே வரப்பண்ணுகிற கர்த்தர் அல்லவா (யோபு 38:32).

சரித்திரத்தில் தேவ வேளைகள்:

நம் சாயலின்படி மனிதனை உருவாக்குவோம் என்று திட்டமிடுவதை ஆதி. 1:26ல் வாசிக்கிறோம். அதுபோல் உருவாக்குவதையும் அதன் பின் ஆதி மனிதன் பாவம் செய்தபோது ஒரு இரட்சிப்பின் திட்டத்தை உருவாக்கி அதற்கு நாள் குறிப்பதை ஆதி. 3:15ல் வாசிக்கிறோம். குறித்த காலத்தில் (ரோமர் 5:6) கிறிஸ்து அக்கிரமக்காரருக் காக மரித்தார் என்று வாசிக்கிறோமே. அந்தக் காலத்தைக் குறித்தது தேவனே. அவர் தமது வேளையில் தவறவுமில்லை, வாக்கு மாறவுமில்லை. அவர் சகலத்தையும் அதினதின் காலத்தில் நேர்த்தியாகச் செய்கிறார் (பிரசங்கி 3:11).

மனித சரித்திரத்தில் தேவன் குறுக்கிடும் காலங்களைப் பாருங்கள். ஆதாமுக்குப் பின் நோவாவின் காலம் வருகிறது. அவன் மரிக்கும்போது வெள்ளம் வரும் என்பதுதான் மெத்தூசலா பெயரின் பொருள். மனித சரித்திரத்தில் தமது இரட்சிப்பின் திட்டத்தை முன்னறிவித்து அவற்றைக் குறித்த காலத்தில் நிறைவேற்றியிருப்பதே தேவனுடைய வேளைகளில் உள்ள தெளிவு என வேதம் கூறுகிறது. குறித்த காலத்தில் கன்னியின் வயிற்றில் பிறந்த இயேசு குறித்த காலத்தில் அக்கிரமக் காரருக்காக மரித்தது மட்டுமல்ல, குறித்த காலத்தில் அதாவது மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார். கர்த்தராகிய இயேசு தான் வாழ்ந்த நாட்களில் தன் வேளை இன்னும் வரவில்லை என்று கூறுவதை இரண்டு இடங்களில் காண்கிறோம். கானாவூர் கலியாண வீட்டில் மரியாளின் வேண்டுகோளுக்கு, ஸ்திரீயே, என் வேளை வரவில்லை என்றார். ஆனால் சற்று நேரத்தில் தண்ணீரைத் திராட்ச ரசமாக்கினார். தன் சகோதரரிடத்தில் என் வேளை இன்னும் வரவில்லை என்றார். ஆனால் அதன் பின் பண்டிகைக்குப் போனார். நாம் கற்றுக்கொள்வது என்ன?

இயேசு எல்லாவற்றையும் தேவ திட்டப்படி தேவன் குறித்த சமயத்தில்

நிறைவேற்றினார். அவருடைய பிரயாணங்கள் எல்லாமே முன்குறிக்கப்பட்டு குறித்த நேரத்தில் இடம்பெற்றதுவே. அவர் பஸ்கா ஆட்டுக்குட்டியாக அடிக்கப்படுவதற்கு எருசலேமுக்குச் சென்ற சமயமும் குறிப்பிடப்பட்ட பஸ்கா பண்டிகை நாட்களே. இயேசு திரும்பி வரப்போவதும் பரலோகம் திட்டம் செய்யும் குறித்த சமயத்திலேயே ஆகும். அவர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்து தாமதிக்கவில்லை. எல்லோரும் மனந்திரும்பவே காத்திருக்கிறார். அவர் சீக்கிரமாய் வரப்போகிறார். அவர் சொன்ன அடையாளங்கள் நிறைவேறிவருகின்றன.

மனித வாழ்க்கையில் தேவ வேளைகள்:

என் காலங்கள் உமது கரத்திலிருக்கிறது என்று சங். 31:15ல் சங்கீதக்காரனும், தம்முடைய கையில் உமது சுவாசத்தை வைத்திருக்கிறவர் என்று தானியேல் 5:23ல் தானியேலும் கூறுவதைப் பாருங்கள். மனித ஆயுசை அவர் தீர்மானித்திருக்கிறார். பிறப்பதும் இறப்பதும் தெய்வச்செயல் என்று பக்தன் பாடுகிறார். ஆனால் இடையில் இருக்கும் வாழ்க்கையை, அதாவது நமக்கு ஜீவியத்தில் கொடுக்கப்பட்ட நாட்களை - சந்தர்ப்பங்களை எப்படி நாம் கையாளுகிறோம் என்பது தான் முக்கியம்.

அநாதிக்காலமாய் இருக்கிற தேவன் நமக்குக் கொடுத்திருக்கும் 70 - 80 ஆண்டு வாழ்க்கையை நிதானத்துடன் கையாளுவோம். விதைக்கும் காலம், அறுக்கும் காலம், கனிதரும் காலம் என்று நம் வாழ்க்கையில் கொடுக்கப்படும் காலங்களைப் பயன்படுத்துகிறோமா? கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து இரவும் பகலும் அவர் வேதத்தில் தியானமாயிருந்தால் கனிதரவேண்டிய காலத்தில் கனி தருகிறவர்களாயிருப்போம். காலத்தின் அருமையை அறிந்து வாழாவிட்டால் கண்ணீர் விடுவது நிச்சயம். எல்லாவற்றிற்கும் ஒரு காலமுண்டு என்பதை உணர்ந்து வாழவேண்டும். கால தாமதம் செய்வது ஏமாற்றத்தைத் தரும்.

நித்திரையை விட்டு எழுந்திருக்கத் தக்க வேளையாயிற்று என்று அறிந்து செயல்பட வேண்டும்(ரோமர் 13:11). சோம்பேறியாக விதைப்புக் காலத்தில் இருந்துவிட்டு அறுப்புக்காலத்தில் பிச்சை கேட்டாலும் கிடைக்காது (நீதி. 20:4). காலையிலே உன் விதையை விதை. மாலையில் உன் கையை நெகிழவிடாதே (பிர. 11:1). எதிலும் கர்த்தருடைய வேளைக்குப் பொறுமையோடு காத்திருப்பது அவசியம். கர்த்தருடைய ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும். கர்த்தருடைய வேளையைத் தாவீது அறிந்து செயல்பட்டதுபோல (1 சாமு. 30:8; 2 சாமு. 5:19-20) செயல்படவேண்டும். கர்த்த ருடைய நேரத்துக்குக் காத்திருக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். சவுல் காத்திருக்க வில்லை (1 சாமு. 13:9-12). காத்திருந்தால் அவர் நமக்காகச் செயல்படுவார்.

1979ல், பணித்தளத்திலிருந்தபோது எனக்கு 70 ரூபாய் தேவைப்பட்டது. காலையில் அதற்காக ஜெபித்து விட்டு, ஊழியத்திற்குச் சென்று திரும்பியபோது, தபால்காரன் 70 ரூபாயை மணியார்டரில் கொண்டுவந்தது ஆச்சரியத்திலும் ஆச்சரியம். நம் தேவையை நாம் அறிவதற்கு 15 நாட்களுக்கு முன் அதை ஒருவர் மூலம் அனுப்பிவைக்கக் கூடிய தேவன். அவர் வேளை பிந்தாது. அவர் குறித்த காலம் நம் காலமாகட்டும். நம் தேவைகள் நம்மைத் துரிதப்படுத்தலாம், பதற வைக்கலாம். நம் ஜெபங்களுக்கு எல்லாம்"என் வேளை இன்னும் வரவில்லை என்று கூறுவது போல் தோன்றலாம்" ஆனால் அவர் சொல் தவறாதவர், நேரம் தவறாதவர். சரியான நேரத்தில் உதவிசெய்வார். தாமதிக்கமாட்டார். கர்த்தருடைய இரட்சிப்புக்குப் பொறுமையோடு காத்திருப்பது நல்லது. ■

நிற்பதும் நிர்மூலமாகாதிருப்பதும் தேவ கிருபை

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் படோலி என் கிராமம். நாள்பட்ட வியாதியினால் படுக்கையில் காலங்கழித்த போது, வருமானத்தின் வழி மூடப்பட்டு, மருத்துவச் செலவினங்கள் அதிகரித்தது; விமோசனமோ பிறக்கவில்லை; வியாதியின் தீவிரம் தணியவுமில்லை!

ஆகஸ்ட் 14 அன்று என்னைச் சந்தித்த ஊழியர் ஜான் மூலம் புதிய ஏற்பாட்டு நூல் என் கரத்தில் கிட்டியது. அதில் எழுதியிருந்த அற்புத அடையாளங்கள் எனது வாழ்வில் இயேசுவின் நாமத்தில் இடம்பெற ஜெபித்தேன். கர்த்தர் என் ஜெபத்தைத் தள்ளவேயில்லை; படுக்கையை விட்டு எழும்ப வைத்தார்! என்னை நிற்கக் காணும் என் வீட்டாரும் விசுவாசத்தில் முன்நிற்கின்றனர். இயேசு இன்றும் ஜீவிக்கிறார் என்பதற்கு ஜீவ சாட்சியாய் படோலி பிராந்தியத்தில் நிலைநிறுத்திய தேவன், விசுவாசிகள் ஐக்கியத்திலும் அவரது மகிமைக்காகப் பயன்படுத்துகிறார், ஸ்தோத்திரம்.

– கனையாலால்

01 ஜம்மு காஷ்மீர் கட்டப்படும் ஆலயங்கள்: 2

முழுநேர ஊழியத்திற்கு 10 இளைஞர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். ரஜோரி மாவட்டத்தில் தள ஆய்வுப்பணிகள் துவங்கியுள்ளன. 12 பேர் கிறிஸ்துவில் தங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்தனர். டோடா ஜில்லாவின் ஹாம்பிள் கிராமத்தில் வேதபாட வகுப்பு திறக்கப்பட்டது, ஸ்தோத்திரம்.

சம்பா, ரம்பான் மாவட்டங்களில் இடம்பெறவுள்ள சிறப்புக் கூட்டங்களுக்கான ஆயத்தங்களுக்காக... ஊழியர்கள் பிங்கு ராம், பிரமோத் பிசோய் ஆகியோரின் தளங்களில் எழும்பும் அந்தகாரக் கிரியைகளைக் கர்த்தர் அகற்ற... சாலை விபத்தில் கால் எலும்புகள் முறிவடைந்த ஊழியர் டேவிட் மசீ என்பாரின் நற்சுகத்திற்காக... விசுவாசிகள் அதிகரிக்கும் சங்வாலி மண்டி தளத்தில் தேவாலயத்திற்கான நிலம் வாங்கப்பட... ஜெபியுங்கள்.

02 இமாச்சலப்பிரதேசம் கட்டப்படும் ஆலயங்கள்: 4

60 கிராமங்கள் தள ஆய்வின் மூலம் ஊழியத்திற்கெனத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. சிலாலா தளத்தின் ஆலய நிலத்திற்கான பதிவுப் பணி தேவ தயவால் நிறைவுற்றது. 150 கிராமங்களில் நடத்தப்பட்ட தேடுவோர் கூடுகைகள் வாயிலாக புதிய தொடர்புகள் பெருகியுள்ளன. கிறிஸ்துவில் தங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்த 22 பேருக்காக ஸ்தோத்திரம்.

முழுநேரப் பணிக்கு அர்ப்பணித்த 12

இளைஞர்களுக்கு ஊழியப் பயிற்சி துவங்க... கெத்தா தளச் சபையார் சுவிசேஷப் பணியில் ஆழ்ந்த ஈடுபாடு கொள்ள... தர்மசாலா தளத்தில் சமுதாய மேம்பாட்டுப்பணிகள் துவங்க வேண்டும்... ஆராதனையில் பங்கேற்கும் 12 புதிய குடும்பங்களும் தேவ வசனங்களில் ஸ்திரப்பட... ஜெபியுங்கள்.

03 பஞ்சாப் **கட்டப்படும் ஆலயங்கள்: 2**

பெச்சோதிட்டா தள ஊழியர் ரவி என்பாரின் திருமண ஆராதனை சுவிசேஷப் பிரபல்யத்திற்கு ஏதுவாயிற்று. பிசாசின் பிடியிலிருந்த பிரியங்காவை இயேசுவின் வல்ல கரம் விடுவித்தது. 4 தளங்களில் விசுவாச அறிக்கை ஆராதனைகள் நடத்தப்பட்டதில் 16 பேர் கிறிஸ்துவில் புதிதாயினர். பாவ மன்னிப்பின் நிச்சயத்தை இயேசுவில் பெற்ற 25 பேர் விசுவாசிகள் ஐக்கியத்தில் இணைந்தனர், ஸ்தோத்திரம்.

ஊழியர் சாம்சன் என்பாரின் மகன் சரும வியாதியுடன் அவதியுறுகிறார். குரிபிந்த் தள விசுவாசிகள் நடுவில் ஆவிக்குரிய வளர்ச்சியை ஆவியானவர்தாமே அருள... பித்தப்பை கற்களுடன் சிகிச்சையிலுள்ள ஊழியர் சாமுவேல் மசீ என்பாரின் நற்சுகத்திற்காக... பாலம்காட் தளத்தில் நிறைவடைந்த சிறப்பு மேளாவின் பின்தொடர் பணிகளுக்காக... ஜெபியுங்கள்.

04 உத்தராகாண்ட் **கட்டப்படும் ஆலயம்: 1**

சுமன் எனும் புதிய விசுவாசியின் ஊழிய வாஞ்சையினால் ஹரிதுவார் தளத்தில் அநேகர் நீதிக்குட்படுகின்றனர். ஊழியம் துவங்குவதற்கு வாய்ப்பு நிறைந்த 75 கிராமங்கள் ஆய்வுப் பணியின் மூலம் கண்டெடுக்கப்பட்டுள்ளன. தேடுவோர் கூடுகைகள் நடத்தப்பட்டதில் 306 பேர் முதன் முறையாய் சுவிசேஷம் கேட்கும் சந்தர்ப்பம் பெற்றனர். கிறிஸ்து இயேசுவில் மனம் புதிதான 16 பேர் விசுவாச அறிக்கை செய்தனர், துதியுங்கள்.

முழுநேர ஊழியத்திற்கு சமர்ப்பித்துள்ள சத்யம் எனும் இளைஞனுக்காக... கோட்வார் தள ஊழியர் ராஜ்குமாரின் மனைவி அடிக்கடி வியாதிக்குள்ளாகிறார்... விசுவாச அறிக்கை ஆராதனைக்கான ஆயத்த வகுப்புகளில் 26 பேர் பங்கேற்கின்றனர்... தேரி கட்வல் பிராந்தியத்தில் புதிய தளங்களைத் திறப்பதில் தேவ நடத்துதலுக்காக ஜெபியுங்கள்.

05 ஹரியானா

ஊழியம் துவங்குவதற்காக 10 புதிய கிராமங்கள் ஆய்வின் மூலம் தெரிவுசெய்யப் பட்டுள்ளன. இரத்தசோகை வியாதியிலிருந்து சுகம்பெற்ற சதீஷ் இயேசுவுக்கு மகிமைசேர்க்கிறார். கிறிஸ்துவில் புதுசிருஷ்டிகளான நரேந்திரா, விஷ்ணுவின் குடும்பங்கள் விசுவாசிகள் ஐக்கியத்தில் இணைந்துள்ளன. ரோஷன்பூர் தளத்தில் 3 பேர் தங்கள் விசுவாசத்தை இயேசுவில் அறிக்கை செய்தனர்.

சிர்சா மாவட்டத்தில் நடத்தப்பட்ட எஸ்றா முகாமில் தெரிவுசெய்யப்பட்ட 9 இளைஞர்களுக்கு ஊழியப்பயிற்சி துவங்கவேண்டும். அம்பாலாவில் ஊழிய ஒருங்கிணைப்பு அலுவலகம் அமைக்க முற்படுகிறோம். மத்தேரி தளத்தில் பணிக்கெதிராய் வருவோரைக் கர்த்தர் சந்திக்க... ஹத்தின், கண்டலி ஆகிய பகுதிகளில் பணிபுரிவதற்குத் தேவன் தமது ஊழியர்களை அனுப்ப ஜெபியுங்கள்.

06 டெல்லி

குடிசைவாழ் குழந்தைகள் 60 பேருக்கு எழுதுபொருள் பெட்டிகள் வழங்கப்பட்டன. ஆராதனையில் பங்கேற்கும் 4 புதிய இளைஞர்கள் வாயிலாக இயேசுவின் நாமம்

உயர்த்தப்படுகிறது. கர்த்தர் செய்த நன்மைகளைப் பிறரிடம் பகிர்ந்துகொள்வதில் 7 விசுவாசிகள் முன்நிற்கின்றனர். மங்கல், பீனா, சுசிலா ஆகியோருக்கு ஏற்ற வேலையைத் தந்த தேவனுக்கு ஸ்தோத்திரம்.

3 இடங்களில் நடத்தப்பட்ட தேடுவோர் கூட்டங்களின் பின்தொடர் பணிகளுக்காக... புதிய ஏற்பாட்டுப் புத்தகங்களைப் பெற்றுள்ள 50 பேரும் வேத மகத்துவங்களை அறிந்துகொள்ள... விசுவாச அறிக்கைக்குத் தங்களை அர்ப்பணித்துள்ள 12 நபர்களின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக... தளங்களில் தொடரும் இரவுக் கூட்டங்களில் புதிய ஆத்துமாக்கள் பங்கேற்க... ஜெபியுங்கள்.

07 ராஜஸ்தான் **கட்டப்படும் ஆலயங்கள்: 5**

5 கிராமங்களில் கர்த்தரின் சபைகள் உருவாகியுள்ளன. பிரதீஷ் வசாயா எனும் இளைஞன் முழுநேரப் பணிக்குத் தன்னை ஒப்புக்கொடுத்துள்ளான். புரகுவா தளத்தில் 5 வருடங்களுக்குப் பின் குழந்தைப் பாக்கியம் பெற்ற லக்ஷ்மன் குடும்பம் கர்த்தரைத் துதிக்கிறது. 71 பேர் கிறிஸ்துவில் தங்கள் புதிய விசுவாசத்தை அறிக்கையிட்டுள்ளனர், துதியுங்கள்.

தான்புராவில் போதைப் பழக்கத்திற்கு அடிமையாயுள்ள தினேஷ் என்பாரின் விடுதலைக்காக... 6 புதிய ஊழியர்கள் இம்மாதத்தில் முழுநேரப் பணியில் இணையவேண்டும்... பீல் ஜனங்கள் நடுவில் 60 பேர் விசுவாச அறிக்கைக்கு ஆயத்தமாகுகின்றனர். விசுவாசிகள் பெருகும் 5 ஆராதனைக் குழுக்களுக்கு ஆலய நிலம் வாங்கப்பட ஜெபியுங்கள்.

08 உத்தரப்பிரதேசம் – போஜ்புரி பிராந்தியம் **கட்டப்படும் ஆலயங்கள்: 3**

12 கிராமங்களில் வேதபாட வகுப்புகள் துவங்கத் தேவன் கிருபை தந்தார். வளாகப் பயிற்சி முடித்து தளம் சென்ற 26 புதிய ஊழியர்களுக்காக கர்த்தருக்கு ஸ்தோத்திரம். தேடுவோர் கூட்டங்கள் 51 கிராமங்களில் இடம்பெற்றன; இயேசுவில் புதுமனம் பெற்ற 181 பேர் விசுவாசிகள் ஐக்கியத்தில் இணைந்தனர். கிறிஸ்துவில் தங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்த 27 புதிய ஆத்துமாக்களுக்காக ஸ்தோத்திரம்.

வெள்ளத்தால் தங்கள் உடைமைகளை இழந்துள்ள கங்கை நதியோரக் கிராம ஜனங்களின் தேவைகளுக்காக... சோன்பத்ரா, அலகாபாத் மாவட்டங்களில் தளம் திறக்கும் புதிய ஊழியர்களுக்காக... ஜலால்பூர், கோபூர் ஆகிய இடங்களில் வசனங்கேட்டோர் உள்ளங்கள் புதிதாக... ராய்புரியா, சிங்பூர் கிராம ஜனங்களின் வாழ்வாதாரம் உயர - பொருளாதாரம் தழைக்க ஜெபியுங்கள்.

09 உத்தரப்பிரதேசம் – லக்னோ பிராந்தியம்

பிப்ரிகாலாவில் விசுவாசி சோட்டிலால் என்பாரின் இல்லம் சுவிசேஷ வேலைக்கெனத் திறக்கப்பட்டது. பகரி தளத்தில் தேவ ஊழியத்திற்கெனத் தங்கள் நிலத்தைக் காணிக்கையாக்கியுள்ள திலக் ராம் குடும்பத்திற்காக ஸ்தோத்திரம். ஐந்து வருடங்களுக்குப் பின் கர்ப்பத்தின் கனி பெற்ற லக்ஷ்மி தேவி குடும்பம் இயேசுவுக்குச் சாட்சிபகருகிறது. உஜார்கூம் விசுவாசிகள் ஐக்கியத்தில் 3 புதிய குடும்பங்களைக் கர்த்தர் சேர்த்தார், ஸ்தோத்திரம்.

லக்னோ பிராந்தியத் தளங்களுக்கு 200 இந்தி வேதாகமங்கள் தேவை... சராய் பணித் தளத்தில் போதை வஸ்துக்களுக்கு அடிமையாயுள்ள இளைஞர்கள் சுவிசேஷத்தினால் மீட்கப்பட... தொழுநோயுடைய ராம காந்த் இயேசுவின் தொடுதலைப் பெற... மகலி பூர்வா, ராய்ஹார் ஆகிய கிராமங்களில் வசனங்கேட்டோர் மனம் புதிதாக ஜெபியுங்கள்.

10 பீஹார்

ஓசையன் தளத்தில் 9 பேர் தங்கள் விசுவாசத்தை இயேசுவில் அறிக்கை செய்தனர். ஊழியர்கள் ஜிதேந்திரக் குமார், பிரிஜ் பீஹாரி ராம் ஆகியோர் இன்னல்கள் நடுவில் தேவனால் காக்கப்பட்டனர். பஜருவாவில் நடத்தப்பட்ட தெபோராள் முகாம் 25 பேருக்குப் பயனளித்தது. ஊழியர் ராகேஷ் குமார் பணிபுரியும் பெல்ச்சி பிராந்தியத்தில் திறந்த வாசலைக் காண்கிறோம்; 25 பேர் சுவிசேஷத்திற்கு மனம் திறந்தனர், ஸ்தோத்திரம்!

எஸ்றா முகாம் மூலம் தெரிவுசெய்யப்பட்டுள்ள 42 இளைஞர்களுக்கு ஊழியப் பயிற்சி துவங்கப்பட... ஜமுய் மாவட்டத்தின் 35 கிராமங்களுக்குப் புதிய ஊழியர் களை அனுப்பும் முயற்சிகளுக்காக... சாப்ரா பிராந்தியத்தில் காணப்படும் ஊழியத் தடைகளைத் தேவன் அகற்ற... அம்னாவன் கிராமத்தில் தொடரும் ஆராதனை குழுவில் புதிய நபர்கள் பங்கெடுக்க... விசுவாச அறிக்கைக்கு ஆயத்தமாகும் 625 பேரும் ஏற்ற வேளையில் கர்த்தரின் சித்தத்தை நிறைவேற்ற... ஜெபியுங்கள்.

11 ஜார்க்கண்டு **கட்டப்படும் ஆலயங்கள்: 2**

மனநோயினின்று விடுதலைபெற்ற நோவல் குஜ்ர் மூலம் லவான்கய் தளத்தில் இயேசுவின் நாமம் மகிமையடைகிறது. சாப்பர் பகுதியில் தேவ வசனங்கள் செல்ல கர்ஜன் புயான் குடும்பத்தைக் கர்த்தர் பயன்படுத்துகிறார். ஊழியர் ராஜேஷ் ஓராவன் மூலம் 5 புதிய வேதபாட வகுப்புகள் துவங்கப்பட்டுள்ளன. 4 பேர் இயேசுவில் விசுவாச அறிக்கை செய்தனர்.

ஊழியப் பயிற்சிக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ள 20 இளைஞர்களுக்காக... கெனபித்தா கிராமத்தார் மனந்திரும்பி, சுவிசேஷத்தில் நம்பிக்கை வைக்க... பொருளாதாரம், வாழ்வாதார நிலைகளில் ஜலீம் கிராமத்தார் முன்னேற்றமடைய... 8 வருடங்களாகக் கர்ப்பத்தின் கனிக்குக் காத்திருக்கும் லகோ ஓராவன் - ரீனு தம்பதியருக்காக... தளங்களில் ஊழியத் தடைகளைச் சந்திக்கும் சஞ்சய், சுசில், அமரன், புதேஸ்வர் ஆகியோருக்குத் தேவ துணை உண்டாக ஜெபியுங்கள்.

12 மேற்கு வங்காளம் – எத்தில்பாரி பிராந்தியம் **கட்டப்படும் ஆலயங்கள்: 2**

73 இடங்களில் தேடுவோர் கூடுகைகள் இடம்பெற்றன; 615 ஆத்துமாக்கள் சுவிசேஷத்தால் சந்திக்கப்பட்டன. பிரஜ் ஓராவன் குடும்பத்தார் அனைவரும் இயேசுவுக்கு இதயம் திறந்துள்ளனர். 6 பேர் தங்கள் விசுவாசத்தைக் கிறிஸ்துவில் அறிக்கைசெய்தனர். வேதபாட நிலையங்கள் இடம்பெறும் 86 கிராமங்களிலும் கர்த்தரின் சபை உருவாகும் வாய்ப்புகள் காண்கிறோம், ஸ்தோத்திரம்.

கஹரு கச்சுவா என்பாரை இழந்துள்ள வீட்டாரின் ஆறுதலுக்காக... விசுவாச அறிக்கை ஆராதனைக்கு 20 பேர் தங்கள் பெயர்களைப் பதிவுசெய்துள்ளனர். சந்திப்பாராவில் வசனங்கேட்டோர் உள்ளங்களில் தேவ ஆவியானவர் கிரியைசெய்ய... பினோத் - மஞ்சுளா டோப்னோ தம்பதியர் 9 வருடங்களாகக் குழந்தை பாக்கியத்திற்குக் காத்திருக்கின்றனர், ஜெபியுங்கள்.

13 மேற்கு வங்காளம் – டார்ஜீலிங் மாவட்டம்

கஹல் லைன் தளத்தில் புதிய விசுவாசி மனிசா லக்ராவின் சாட்சியினால் கர்த்தர் அநேக இருதயங்களில் கிரியைசெய்கிறார். மூனி கிராமத்தில் சமாதானத்திற்குத் தூரமாயிருந்த பிரியா குடும்பம் சுவிசேஷத்தினால் மறுவாழ்வு பெற்றது. கடாஜார், கோஷ்புகூர் தளங்களில் விசுவாசிகளின் எண்ணிக்கை பெருகக் காண்கிறோம்.

ஃபுல்பாரி, தளத்தில் கிரன் ஒராவன் குடும்பம் சமாதானப் பாத்திரமாய்த் திகழ்கிறது, துதியுங்கள்.

பாச்கல்குரி பகுதியில் வசனங்கேட்டோர் உள்ளங்கள் கிறிஸ்துவில் புதிதாக... காசநோயுடைய சந்து டோப்போவுக்கு இயேசுவின் தொடுதல் தேவை... நியூலைன் கிராம விசுவாசிகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக... வசனங்கேட்ட பிரேம்ஜீத் ரோதியா குடும்பத்தினர் மறுபிறப்பின் அனுபவம் காண ஜெபியுங்கள்.

14 மேற்கு வங்காளம் – கொல்கத்தா பிராந்தியம் **கட்டப்படும் ஆலயங்கள்: 2**

பஹடோல் தள விசுவாசிகளின் எண்ணிக்கை 56 ஆக உயர்ந்தது. கோனுவா, ஹரிஹர்பாரா ஆகிய இடங்களில் ஆலயக் கட்டுமானத்திற்கான அனுமதி ஆவணம் கிடைக்கப்பெற்றோம். ஹத்பாரா தளத்தின் தேவாலயம் பிரதிஷ்டை நாளை எதிர்நோக்கியுள்ளது. செஞ்ச்ராகுரியில் 35 பேர் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் அன்பிலும் அறிவிலும் வளருகின்றனர், துதியுங்கள்.

கோபிந்த்பூர் தளத்தில் சுப்ரியா எனும் 10 வயது சிறுமி வயிற்றுக் கட்டியினால் அவதியுறுகிறாள். விசுவாச அறிக்கைக்கான ஆயத்த வகுப்புகளில் 157 பேர் பங்கேற்கின்றனர். புர்துவான், தக்ஷின் தினாஜ்பூர் மாவட்டங்களில் தொடரும் தள ஆய்வுப் பணிகளுக்காக... சந்திபூர், சிங்குவாஹர் ஆகிய இடங்களில் வசனங்கேட்டோர் உள்ளங்களில் தூய ஆவியானவர் கிரியைசெய்ய ஜெபியுங்கள்.

15 சிக்கிம் **கட்டப்படும் ஆலயம்: 1**

தாராப் தளத்தில் 15 பேர் தங்கள் விசுவாசத்தை இயேசுவில் அறிக்கை செய்தனர். புதிய விசுவாசி இந்திரா மாயா குடும்பத்திற்குக் கர்த்தர் அருளிய புதிய இல்லத்திற்காக ஸ்தோத்திரம். எதிர்ப்புகள் நடுவிலும் புஜேல் என்பாரின் விசுவாசம் கிறிஸ்துவில் உறுதியாயுள்ளது. டோரிபாரி பகுதியில் வசனங்களைக் கேட்டவர்களுள் 6 பேரின் விசுவாசம் இயேசுவில் துளிர்த்தது, துதியுங்கள்.

ரான்பூ, சிங்தாம் ஆகிய இடங்களில் பரவும் டெங்கு, டைபாய்டு போன்ற வியாதிகளுக்குத் தேவன் முற்றுப்புள்ளியிட... தேடுவோர் கூடுகைகளில் சுவிசேஷம் கேட்ட 277 பேரும் இரட்சிப்பின் அனுபவம் பெற... தாராகாவ் தளத்தில் தேவ சபை வர்த்திக்க... உப்பர் பலுதாங் சபை மூலம் அண்டை கிராமங்கள் சுவிசேஷம் பெற ஜெபியுங்கள்.

16. அசாம் **கட்டப்படும் ஆலயங்கள்: 4**

பாவ அறிக்கையைத் தொடர்ந்து விசுவாச அறிக்கை செய்த 8 ஆத்துமாக்களுக்காகக் கர்த்தருக்கு ஸ்தோத்திரம். பத்திரிகாவ் கிராமத்தில் இடம்பெற்ற தேடுவோர் கூடுகை 16 பேருக்குப் பயனளித்தது. ஆதித்யா கொயாரி குடும்பத்தினர் இயேசுவைச் சேவிக்க முன்வந்தனர். குலிச்சபோரி சபையார் நடுவில் சுவிசேஷ வாஞ்சை காண்கிறோம்.

பக்கவாதத்தினால் வலதுபுற உறுப்புகளில் செயலிழந்த ஜெகத் மோகன் இயேசுவால் சுகம்பெற... ஊழியர்கள் ராமன் டோலே, உத்தம் சந்திரா ஆகியோரின் பணிகளில் தேவன் புதிய தொடர்புகளைத் தர... பிசாசின் பிடியிலுள்ள ஆர்பா பாஸ்கே இயேசுவின் நாமத்தில் விடுதலையடைய... விசுவாச அறிக்கைக்கான ஆயத்தங்களில் ஈடுபடும் 191 பேரும் வசனங்களில் ஸ்திரப்பட... ஜெபியுங்கள்.

17 மணிப்பூர் **கட்டப்படும் ஆலயங்கள்: 2**

இகங்பாம் என்பாரின் நடக்கமுடியாத கால்கள் இயேசுவின் நாமத்தில் நடப்பதற்குப் புதுபெலன் பெற்றன. லாமைதெல் தளத்தில் பணிக்கெதிராய் நின்ற இனோவ் சிங்

வீட்டார் தேவ அன்புக்குத் தங்களை அர்ப்பணித்தனர். பக்கவாதத்தினால் 3 மாதங்களைப் படுக்கையில் கழித்த பூர்ணாசிங் ஜெபத்தினால் எழுந்து, யாயரிபோக் தளத்தில் நற்சாட்சியானார். விசுவாச அறிக்கை செய்து, கிறிஸ்துவில் பெலப்படும் 4 புதிய ஆத்துமாக்களுக்காக ஸ்தோத்திரம்.

லம்ஜாவ் எனுமிடத்தில் ஆலய நிலம் வாங்கும் முயற்சிகளுக்காக... லேமராம் தளத்தில் விசுவாசிகளின் எண்ணிக்கை உயர... புற்றுநோயினால் பாதிக்கப்பட்ட சாலூன் எனும் சிறுமகனுக்குத் தேவன் சுகம் தர... தளங்களின் 31 ஆராதனைக் குழுக்களில் இடம்பெறும் வேதாகமத் தேர்வு மூலம் வசன வாஞ்சை விசுவாசிகள் நடுவில் பெருக ஜெபியுங்கள்.

18 தீரிபுரா **கட்டப்படும் ஆலயங்கள்: 16**

லோதராய்காமி விசுவாசிகள் ஐக்கியத்தில் 3 குடும்பங்கள் இணைந்துள்ளன. பாவ அறிக்கை செய்த 24 பேர் கிறிஸ்துவில் தங்கள் விசுவாசத்தையும் அறிக்கையிட்டனர். ஆயிஷா தெபர்மாவை அலைக்கழித்த அசுத்த ஆவி ஜெபத்தினால் நீங்கியது. கர்ப்பத்தின் கனிபெற்ற அஜந்தா குடும்பத்தினர் ஹோலாங் ஆராதனைக் குழுவில் இணைந்து கர்த்தரை மகிமைப்படுத்துகின்றனர்.

புதிய ஆலயங்கள் பெற்றிருக்கும் செதுங் பாரா, பத்திசந்திரகாமி தளச் சபையார் சுவிசேஷப் பணிகளில் ஈடுபட... மனநோயுடைய தாபன் தெபர்மாவுக்குக் கர்த்தரால் சுகம் கிடைக்க... விசுவாச அறிக்கைக்கு ஆயத்தமாகும் 78 பேரும் தேவ வசனங்களில் ஸ்திரப்பட... சிறுமகனை இழந்துள்ள ஊழியர் பீரேந்திரா ரியாங்கின் குடும்பம் தேவ ஆறுதல் அடைய... ஜெபியுங்கள்.

19 ஒடிசா – கஜபதி, கஞ்சம் மாவட்டங்கள் **கட்டப்படும் ஆலயங்கள்: 9**

ராஜாபூரில் 16 பேர் கொண்ட வேதபாட வகுப்பு துவங்கப்பட்டுள்ளது. ஊழியர் மனோஜ் கொமாங்கோ குடும்பத்திற்குக் கர்த்தர் கர்ப்பத்தின் கனி தந்தார். காரிபள்ளி தளத்தில் தேவாலயக் கட்டுமானப் பணி நிறைவடைந்தது. 10 பேர் தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டனர்; மேலும் 25 பேர் அவ்வித அனுபவத்திற்கு ஆயத்தமாகுகின்றனர்.

மருத்துவச் சேவையினால் சந்திக்கப்பட்ட புலாசாகி, ஆடியார், தனபாடா ஆகிய கிராமங்களில் ஜனங்களின் நல்வாழ்வு மலர... கானாசாகர், சிந்துபா ஆகிய கிராம விசுவாசிகளின் ஊழிய ஈடுபாட்டின் மூலம் மனந்திரும்புவோர் பெருக... முதன் முறையாய்ச் சுவிசேஷம் கேட்ட 213 பேரும் தேவ அன்பில் நிலைத்திருக்க... ஜெயமணி கோமாங்கோவின் செயலிழந்த கிட்னி இயேசுவின் நாமத்தில் செயல்பட... ஜெபியுங்கள்.

20 ஒடிசா – ஹோ, சந்தாலி பிராந்தியம் **கட்டப்படும் ஆலயங்கள்: 6**

சோனார்புசி பகுதி ஊழியங்களில் நிலவிய தடைகள் இயேசுவின் நாமத்தில் நீங்கின. காதி பகலி கிராம சிறப்புக் கூடுகை 200 ஆத்துமாக்களுக்குப் பயன் தந்தது. துமுர்திகா தள ஆலயக் கட்டுமானப் பணி தேவ திட்டப்படி நடந்தேறுகிறது. பதகூஷ்பாடா கிராமத் தலைவரது இருதயத்தில் கர்த்தர் கிரியைசெய்தார், ஸ்தோத்திரம்.

சந்தாலி விசுவாசிகள் வசிக்கும் 5 கிராமங்களில் ஆலயக் கட்டுமானப் பணி இடம்பெறுகிறது... சிங்டாவில் இயங்கும் தள அலுவலகம் மூலம் 4 மாவட்ட ஊழியங்கள் கண்காணிக்கப்படுகிறது; 300 கிராமங்கள் சுபிட்சம் பெறவேண்டும்...

சுகாதாரக் குடிநீர், மின்சாரம், ஆரம்ப சுகாதார நிலையம் போன்ற வசதிகள் குக்கிராமங்களுக்குக் கிடைக்கவேண்டும். "30 புதிய பணித்தளங்கள்" எனும் இவ்வருட ஊழியத் திட்டம் தேவனால் நிறைவேற ஜெபியுங்கள்.

21 ஒடிசா – கந்தமால் மாவட்டம் **கட்டப்படும் ஆலயங்கள்: 8**

கஞ்சுபங்கா பகுதியில் ஊழியம் ஆரம்பிக்கப்பட்டது; 3 குடும்பங்கள் நற்செய்திப் பணிக்கு மிகுந்த வரவேற்பு தந்துள்ளனர். புதிய ஆலயம் பெற்ற பனஸ்பதி தள விசுவாசிகள் சுவிசேஷ வேலையில் முன்நிற்கின்றனர். முதன் முறையாய் வசனங்கேட்ட 151 பேர் உள்ளங்களிலும் நற்செய்தி தாகம் காண்கிறோம். சரண் லதா திகல் என்பாரின் ஒரு மாத கால வியாதிப்படுக்கையைத் தேவன் மாற்றினார், ஸ்தோத்திரம்.

ஃபிரிங்கியா தளத்தில் இடம்பெறவுள்ள விசுவாச அறிக்கை ஆராதனைக்கு 30 பேர் ஆயத்தமாகுகின்றனர். ஊழியர்கள் கைலாஷ் திகல், ரங்காநிதி திகல் ஆகியோரின் ஊழியப் பிரயாசங்களால் ஆத்துமாக்கள் குணப்பட... சென்ஸ்போதி கிராம ஜனங்களுக்குச் சுகாதாரக் குடிநீர், மருத்துவமனை போன்ற தேவைகள் உண்டு, ஜெபியுங்கள்.

22 ஒடிசா – சம்பல்புரி பிராந்தியம்

15 புதிய ஆத்துமாக்களைத் தேவன் தமது சபையில் சேர்த்துள்ளார். சிந்தோல் ஆலயப் பிரதிஷ்டை ஆராதனையில் தேவ மகிமையைக் கண்டோம். தல்பாடாவில் இடம்பெற்ற விசுவாச அறிக்கை ஆராதனையைத் தொடர்ந்து, மேலும் 8 பேர் அவ்வித அனுபவத்திற்கு ஆயத்தப்படுகின்றனர். 8 வருட நிறைவை நினைவுகூரும் சங்ராம்பூர் சபையார் நடுவில் சுவிசேஷ வேலைக்கான புதிய தீர்மானங்கள் பிறந்துள்ளன, துதியுங்கள்.

பரிசுத்த வேதாகமம் பெற்றுள்ள இளைஞர்களுக்கு வேதத்தின் மகத்துவங்களைக் கர்த்தர் கற்பிக்க... ஊழியர் இப்ராயிம் பாரிக் என்பார் பணிபுரியும் 5 கிராமங்களிலும் தேவன் திருச்சபைகளை உருவாக்குவாராக... பௌத் மாவட்டத்தில் தொடரும் தள ஆய்வுப் பணியில் கர்த்தரின் வழிநடத்துதலுக்காக... புதிய விசுவாசி பந்தனாவின் சாட்சியினால் வீட்டாரனைவரும் புதுவாழ்வுக்குள் வர... ஜெபியுங்கள்.

23 ஒடிசா – ராயகடா மாவட்டம் **கட்டப்படும் ஆலயம்: 1**

கிதிரிமாலில் காணப்பட்ட ஊழியத் தடைகளைத் தேவன் அகற்றினார். ராயகடா மாவட்டத்தின் குயி ஜனத்தார் நடுவில் தள ஆய்வுப் பணிகள் துவங்கியது. ஊழியர் அமியல் மண்டல் என்பாரின் குடும்பத்திற்குக் கர்த்தர் அருளிய குழந்தைப் பாக்கியத்திற்காக ஸ்தோத்திரம். ஆலயப் பிரதிஷ்டை ஆராதனையைக் கண்ட ஒம்ராங்சிங் தளச் சபையார் நடுவில் நற்செய்திப் பணிக்கான தாகம் அதிகரித்துள்ளது, துதியுங்கள்.

சாலை விபத்தில் காயமுற்ற ஊழியர் ரிதன் தல்பெஹராவுக்குக் கர்த்தர் சுகம் தர... திம்பிரிகுடாவில் இன்னல்களைச் சந்திக்கும் புதிய விசுவாசிகளுக்குத் தேவன் தமது ஒத்தாசையைக் கட்டளையிட... கண் பார்வையில் ஒளிமங்கும் ஊழியர் ஜெயபோ ராய்தாவுக்கு ஏற்ற சிகிச்சை கிடைக்க... சாலை வசதிக்காக ஜெபிக்கும் ஹல்லாம், கொதிகன்டா பகுதி விசுவாசிகளின் ஜெபங்கள் கேட்கப்படுவதாக!

24 சத்தீஸ்கடு – சம்பா பிராந்தியம்

சுவிசேஷம் கேட்ட ராஜேஷ்வர் திக்கா 'இனி மது அருந்துவதில்லை' எனத்

தீர்மானித்துள்ளார். பனஹில் கிராமத்தில் 2 வருடங்களாகப் பிசாசின் பிடியிலிருந்த ஜூல்பாய் இயேசுவின் நாமத்தில் விடுதலை பெற்றார். பெந்த்ரி தளத்தில் மங்கள் தகரியா வீட்டாரனைவரும் இயேசுவைச் சேவிக்கின்றனர். போர்சி எனுமிடத்தில் வேதபாட வகுப்பு துவங்கப்பட்டது. 19 பேர் தங்கள் விசுவாசத்தை இயேசுவில் அறிக்கை செய்தனர், துதியுங்கள்.

கோட்சல், கோசா, பார்பாலி ஆகிய இடங்களில் தொடரும் தேடுவோர் கூடுகைகளில் புதிய ஆத்துமாக்கள் பலனடைய... சர்குஜா மாவட்டத்தின் உள்ளான கிராமங்களுக்கு ஊழியர்கள் இன்னும் தேவையாகுகிறார்கள். கிக்பாய், சுதிர் சுக்தேவ் ஆகியோரின் நெடுநாள் வியாதிப்படுக்கையைத் தேவன் மாற்றுவாராக. ஊழியத்தின் பாதையில் கணவரை இழந்துள்ள சகோதரி சுவேதா மசீ மற்றும் சிறுமகன் ஆனோஷ் ஆகியோருக்குக் கர்த்தர் துணை நிற்க... ஜெபியுங்கள்.

25 சத்தீஸ்கடு – ராய்பூர் பிராந்தியம் **கட்டப்படும் ஆலயங்கள்: 3**

தளங்களில் தொடரும் முழு இரவு ஜெபக் கூடுகைகளில் கர்த்தரின் அற்புத அடையாளங்கள் காண்கிறோம். 50 புதிய கிராமங்கள் ஊழியத்திற்கெனத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. அபன்பூரில் மருத்துவ முகாம் மிகுந்த பயன் தந்தது; 50 சிறுவர் சிறுமியருக்கு வைட்டமின் மாத்திரைகள் வழங்கப்பட்டுள்ளன. மந்திர்ஹசோடு தள ஆராதனையில் புதிதாய் இணைந்த புராணிக் குடும்பத்தினர் தேவ அன்புக்குச் சாட்சி பகருகின்றனர்.

ஊழியப் பயிற்சிக்கெனத் தெரிவுசெய்யப்பட்டுள்ள 10 இளைஞர்கள் பயிற்றுவிக்கப் பட... ராய்பூர், பலடா பஜார் ஆகிய மாவட்டங்களில் 'பயிற்சி முதிர்ச்சி வளர்ச்சி' மையங்கள் துவங்கும் பிரயாசத்திற்காக... சுரேந்திரா தன்டி, கௌசல் ஆகியோரின் விசுவாசம் கிறிஸ்துவில் ஸ்திரப்பட... விசுவாச அறிக்கைக்குத் தங்கள் பெயர்களைப் பதிவுசெய்த 57 பேரும் சாட்சியின் ஜீவியத்தில் நிலைத்திருக்க... ஜெபியுங்கள்.

26 குஜராத் – அகமதாபாத் பிராந்தியம் **கட்டப்படும் ஆலயம்: 1**

சபர்காந்தா பகுதியில் 14 இளைஞர்கள் முழுநேர ஊழியத்திற்குத் தங்களை அர்ப்பணித்துள்ளனர். ஊழியர் ராஜு வில்சன் என்பாரின் வியாதிப்படுக்கையைத் தேவன் மாற்றி, மீண்டும் பணித்தளம் திரும்ப உதவிசெய்தார். லிம்பாதி கிராமத்தில் 5 பேர் தங்கள் விசுவாசத்தை இயேசுவில் அறிக்கைசெய்தனர். கராடு பணித்தள ஆலயம் கர்த்தரின் கிருபையால் பிரதிஷ்டை செய்யப்பட்டது; தள விசுவாசிகளின் நெடுநாள் வாஞ்சையைத் தேவன் பூர்த்தி செய்தார், ஸ்தோத்திரம்.

மகிசாகர், தாகோத் பகுதியிலுள்ள நமது ஆலய வளாகங்களில் ஊழியர் குடும்பங்களுக்குத் தங்கும் அறைகள் கட்டப்படவேண்டும்... பரோடா, அகமதாபாத் போன்ற இடங்களிலிருந்து எஸ்றாக்கள் எழும்புவார்களாக... சஞ்சலி, சிங்வாத் பகுதி ஜனங்கள் நடுவில் தளங்கள் திறக்க வாஞ்சிக்கிறோம்... தமன்கோப்ரா, ஹிரோலா, வகேலா ஆகிய தளங்களில் தொடரும் ஊழியங்களில் கனிகள் திரளாக ஜெபியுங்கள்.

27 குஜராத் – சோங்காட பிராந்தியம் **கட்டப்படும் ஆலயங்கள்: 13**

கந்த்வாவ் பகுதியை மையமாகக் கொண்டு சுவிசேஷப் பணிகள் துவங்கப்பட்டன. வல்போர் தளத்தில் வாசுபேனின் மந்தமான செவிகளைத் தேவன் திறந்தார். ரஜ்வாடி சபையில் இடம்பெற்ற இளைஞர் முகாம் 75 பேருக்குப் பயனளித்தது. இளைஞன் ஆஷவ்பாய் தேவ பணியில் முழுநேரமாய் இணைய முன்வந்துள்ளான். 6 பேர் தங்கள் விசுவாசத்தை கிறிஸ்துவில் அறிக்கை செய்தனர். துதியுங்கள்.

16 கிராமங்களில் ஊழியம் துவங்குவதற்கான வாய்ப்புகள் காண்கிறோம்... அம்லிதப்ரா தளத்தில் ஆலயக் கட்டுமானத்திற்கு விரோதமாய் நிற்போரைக் கர்த்தர் சந்திப்பாராக... நசர்பூர், மோதிபாரா ஆகிய இடங்களில் வசனங்கேட்டோர் உள்ளம் இயேசுவில் புதிதாக... கௌந்த் தளத்தாருக்கு ஆலயம் அமைப்பதற்கு நிலப்பதிவு, கட்டுமான அனுமதி கடிதங்கள் கிடைக்கப்பெற ஜெபியுங்கள்.

28 மகாராஷ்டிரா **கட்டப்படும் ஆலயங்கள்: 3**

6 வருடங்களாக அசுத்த ஆவியின் பிடியிலிருந்த ஜீஜாபாய் போக்தே இயேசுவால் மீட்கப்பட்டார். போத்கி காடி கிராமத்தில் எதிர்ப்புகள் தணிந்தது. இந்துபாய் போயார் குடும்பம் இயேசுவைச் சேவிக்க முன்வந்தது. இனி மது அருந்துவதில்லை என்ற அம்பதாஸ் காம்ளேயின் தீர்மானத்தால் வீட்டாரனைவரும் சமாதானம் பெற்றுள்ளனர், ஸ்தோத்திரம்.

வலிப்பு வியாதியினால் அவதியுறும் பல்லவிக்கு இயேசுவின் தொடுதல் தேவை... துக்காரிபாடாவில் வசனம் செல்லும்படியான அநுகூல வாசல் திறக்கப்பட... போதை வஸ்துக்களுக்கு அடிமையான பிரணவ் என்பாரின் விடுதலைக்காக... இயேசுவில் பெற்ற விடுதலையைச் சாட்சியாய்ப் பகரும் புதிய விசுவாசி சகுபாய் மூலம் மனந்திரும்புவோர் பெருக ஜெபியுங்கள்.

29 தெலுங்கானா **கட்டப்படும் ஆலயங்கள்: 3**

3 கிராமங்களில் வேதபாட நிலையங்கள் திறக்க தயைசெய்த தேவனுக்கு ஸ்தோத்திரம். நாராயணபுரம் தாலுகாவில் 15 புதிய கிராமங்கள் ஊழியத்திற்கெனத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. முழுநேரப் பணியில் இணைய 4 இளைஞர்கள் தளங்களில் முன்வந்துள்ளனர். கின்னரசனி ஆலய வளாகத்தில் ஊழியர் தங்கும் அறை அமைக்க கர்த்தர் உதவிசெய்தார். 3 பேர் கிறிஸ்துவில் தங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்தனர், துதியுங்கள்.

நாராயண்பேட் மாவட்டத்தின் உள்ளான கிராமங்களில் சுகாதாரக் குடிநீர், கல்விக் கூடங்கள் போன்ற தேவைகளை காண்கிறோம்... சென்னரெட்டிகுடம் தளத்தில் ஆலயம் கட்டுவதில் தேவ நடத்துதலுக்காக... செஞ்சு ஜனங்கள் நடுவில் பணிபுரியும் 15 ஊழியர்களுக்கு மெகபோன் தேவை... மக்கபள்ளி, சில்லபுரம் ஆகிய இடங்களில் தேவ பணிக்கு எதிராகச் செயல்படுவோரைத் தேவன் சந்திக்க... ஜெபியுங்கள்.

30 ஆந்திரப் பிரதேசம் – ஸ்ரீகாகுளம் மாவட்டம் **கட்டப்படும் ஆலயங்கள்: 8**

9 பேர் தங்கள் விசுவாசத்தைக் கிறிஸ்து இயேசுவில் அறிக்கை செய்தனர். போஞ்ஜடா தளத்தில் ரமேஷ் என்பாரின் குடும்பம் கர்த்தருக்குத் தங்களை அர்ப்பணித்துள்ளது. கிட்னி சம்பந்தமான வியாதியினால் தொய்ந்துபோயிருந்த தாவீது என்பாரின் ஜீவியம் இயேசுவில் புதிதானது, துதியுங்கள்.

போந்திகுடா கிராமத்தாரின் வாழ்வாதாரங்கள் உயர... ஸ்ரீகாகுளம் மாவட்டப் பணித்தளங்களில் இடம்பெறும் 8 ஆலயக் கட்டுமானப் பணிகளின் நிறைவுக்காக... விசுவாச அறிக்கைக்கு ஆயத்தமாகும் 15 பேரும் வசனங்களில் ஸ்திரப்பட... சிறுவர் வகுப்புகள், ஓய்வுநாள் பள்ளிகளில் பங்கேற்கும் 1153 சிறுவர், சிறுமியரின் வருங்காலங்கள் கிறிஸ்துவுக்குள் பிரகாசமாக ஜெபியுங்கள்.

31 கர்நாடகா **கட்டப்படும் ஆலயம்: 1**

மல்லசமுத்ரா, கௌரம்மா சமுத்ரா ஆகிய ஆராதனைக் குழுக்களில் புதிய நபர்களின் பங்கேற்பு அதிகரித்துள்ளது. ஹொன்னூரு தளத்தின் சுவிசேஷக் கூடுகை

75 ஆத்துமாக்களுக்குப் பயன் தந்தது. பசவகல்யாண் பகுதி ஊழியங்களில் நாகினி வீட்டாரைச் சமாதானப் பாத்திரமாய்த் தேவன் தந்துள்ளார். பாவ அறிக்கை செய்த 13 பேர் இயேசுவில் தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டனர், துதியுங்கள்.

கேட்கும் திறன் குறைந்துபோன குசுமா என்பாரின் செவிகளைத் தேவன் திறப்பாராக... விசுவாச அறிக்கைக்கான ஆயத்த வகுப்புகளில் 107 பேர் பங்கேற்கின்றனர். விசுவாசிகள் பெருகும் பரசுராம்புரா தளச் சபையின் விரிவாக்கத்திற்கு நிலம் வாங்கப்பட வேண்டும். சோலூர் தளத்தில் இடம்பெற்ற மூப்பர்கள் முகாமின் பின்தொடர் பணிகளுக்காக... ஜெபியுங்கள்.

தேவ வேளை வந்தது

தேவ ஜனம் வாழக்கூடாது என்பதில் திட்டவட்டமாகவும் தேவ ஊழியர்கள் கண்ணில் படக்கூடாது என்பதில் மனத்தெளிவுள்ள வனாகவும் சவுலின் ஜீவியத்தைக் கொண்டிருந்தேன். மகாராஷ்டிர மாநிலம் – அல்லபலி கிராமத்தில் சபைக்கு எதிராகவும், விசுவாசிகளுக்கு விரோதமாகவும் செயல்பட்டதுடன், வேதப் புத்தகத்தை வாசிப்பவர்களுக்குப் பற்பல இன்னல்களையும் விளைவித்தேன். எத்தகைய ஊழியர்களானாலும் என் கோபக் கண்களுக்கு முன்வரத் தயங்குவது உண்டு. மூன்று வருடங்களாக விசுவாசக் கூட்டம் என்னால் பெருந்துயரங்கள் கண்டது.

முழு இரவு ஜெபக் கூடுகையைத் தடுக்க முற்பட்டபோது சிறு குழந்தை ஒன்றின் சாட்சி என் நெஞ்சை உருக்கியது; இயேசுவின் சிலுவை சிநேகத்தை என் உள்ளம் உணர்ந்தது! இத்தனை கொடூரனாகவும் மூர்க்கத்துடனும் நடந்து விட்டேனே என்ற மனஸ்தாபம் பெற்று, இயேசுவில் புது சிருஷ்டியாய் மாற்றம்பெற்றேன். மகாராஷ்டிராவில் என்னால் ஊழியத் தடைகளை கண்ட கட்சிரோலி மாவட்டத்தின் உள்ளான கிராமங்களில் கர்த்தர் என்னை முழுநேர ஊழியனாய்ப் பயன்படுத்துகிறார். நானும் என் மனைவியும் செல்லும் கிராமங்களில் புதிய புதிய ஆத்துமாக்களைக் கர்த்தர் தருகிறார்; இரட்சிக்கப்படுகிறவர்களைத் தமது சபையில் சேர்க்கிறார், ஸ்தோத்திரம்!

- ஊழியர் பிரதீப் விலாஸ் சுனார்கர்

நன்றி கூறுகிறோம்

கர்த்தராகிய இயேசுவின் சுவிசேஷத்தைப் பஞ்சாப் மாநிலம் குருதாஸ்பூர் மாவட்டத்தின் உள்ளான கிராமங்களுக்கு அறிவிக்க 13.8.22 அன்று அருட்பணியாளரைப் பிரதிஷ்டை செய்து அனுப்பிய கோபாலபட்டி, ரெண்டலபாறை திருச்சபையின் போதகர்கள் Rev. தாவீது செல்லத்துரை, Rev. ஜாக்சன் மற்றும் தாங்கும் திருச்சபையின் குடும்பங்களை வாழ்த்துகிறோம்.

தூய பவுலின் ஆலய ஆராதனையில் 14.8.22 அன்று பஞ்சாப் ஊழியர்கள் 4 பேர் பங்கேற்கவும், ஊழிய, தேவ செய்தியைப் பகிர்ந்து கொள்ளவும் வாய்ப்பு அருளிய Rev. ஸ்டான்லி ஜெயராஜ் ஐயா அவர்களுக்கு மிகுந்த நன்றிகூறுகிறோம்.

விஷ்வவாணி ஊழிய விபரங்கட்கு தொடர்புகொள்ளுங்கள்

தென் தமிழகம்: திருநெல்வேலி & தென்காசி: 9442006618. 18-B, டேனியல் தாமஸ் தெரு, பாளையங்கோட்டை-2. நாகர்கோவில்: 9444343180. தூத்துக்குடி: 9677796052.

மத்திய தமிழகம்: 29A, பிலிப்ஸ் கார்டன், பெத்தானி நகர், விளாச்சேரி ரோடு, பசுமலை, மதுரை-625004. மதுரை: 0452-2380443, 9865352272. திண்டுக்கல்: 9788427036 விருதுநகர்: 9659803075. திருச்சி: 26A, எட்டுப் பட்டறை காம்பவுண்டு, திரு.வி.க. நகர், புத்தூர், திருச்சி-620017 ✆ 9488804685. தஞ்சாவூர்: 9, கிருபை இல்லம், R.B. ரோடு, மிஷன் தெரு, தஞ்சாவூர் - 613001. ✆ 9443586692

மேற்கு தமிழகம்: கோயம்புத்தூர்: 45, அன்சாரி வீதி, ராம் நகர், கோயம்புத்தூர்-641009 ✆ 0422-2232504. ✆9442006614. சேலம்: ✆ 9789758300.

வட தமிழகம்: சென்னை – வேளச்சேரி: தேவா-சுசி இல்லம், 13/9, 7வது மெயின் ரோடு, தண்டீஸ்வரம் நகர், வேளச்சேரி, சென்னை-600042. Ph: 9600888375. சென்னை-முகப்பேர்: LIG 502, முகப்பேர் ஏரித் திட்டம் 8வது தெரு, முகப்பேர், சென்னை-600037. Ph: 9443004640. சென்னை – பெரும்பாக்கம்: 5/225-A வீரமா முனிவர் தெரு, பசும்பொன் நகர், பெரும்பாக்கம், சென்னை-600100. ✆9003609874. விழுப்புரம் & பாண்டிச்சேரி: ✆9443997515. வேலூர்: 9/513, 16வது தெரு, Phase - 1, சத்துவாச்சாரி, வேலூர் - 632009. ✆9600138998

பிற மாநில அலுவலகங்கள்: புது டெல்லி: 011-26365928, 9910762447. பெங்களூரு: 080-23333509. மும்பை: 9890223355, 9029872213.

நடப்புச் செய்திகள்:

சுகாதார பராமரிப்பு முறைகளில் முன்னேற்றம் காண்கிறோம் என்கிறது உலக சுகாதார அமைப்பு – யுனிசெஃப்.

கோவிட்-19 தொற்றுநோய் மற்றும் குரங்கு அம்மை போன்ற நோய்களின் அச்சுறுத்தலை எதிர்த்து உலகம் போராடும் அதே வேளையில், மறுபுறம் உலகின் 51 சதவீத சுகாதார மையங்கள் அடிப்படை வசதிகளை வழங்குகின்றன.

எஞ்சிய மையங்களில் தண்ணீர், சோப்பு, சானிடைசர் என எந்த வசதியுமில்லை என்றாலும், 385 கோடி ஜனக்கூட்டம் அடிப்படை வசதிகள் இல்லாத சுகாதார மையங்களைத்தான் நம்பியுள்ளனர்!

மேலும், 688 கோடி ஜனங்கள் பயன் படுத்தும் சுகாதார மையங்களில் சுத்தம், சுகாதாரம் கேள்விக் குறியாகியுள்ளது. அவைகளை தொடராய்ப் பராமரிக்க இணைப்புள்ள உட்கட்டமைப்பு இல்லை.

உலகில் சுமார் 17 கோடி ஜனங்கள் இன்னும் தண்ணீர் பற்றாக்குறை கொண்ட சுகாதார மையங்களையே சார்ந்திருக்கிறார்கள். இதை தவிர, 857 கோடி பேர், சுகாதார மையங்களை பயன்படுத்துவதே இல்லை.

கிழக்கு மற்றும் தென்கிழக்கு ஆசியாவில் 90 சதவீதத்தினருக்குச் சுகாதார மையங்களை அணுகும் அநுகூல வாய்ப்புகள் உண்டு; துணை-சஹாரா ஆப்பிரிக்கா பகுதியில் 52 சதவீதத்தினர் மட்டுமே சுகாதார வசதிகள் கொண்டுள்ளனர்! இன்னும் மிகப் பின்தங்கிய நாடுகளைப் பார்த்தால், இந்த எண்ணிக்கை 47 சதவீதம் மட்டுமே.

பரம வைத்தியரே, பூலோக ஜனங்களுக்காகப் பரிதபிக்கிறவரே, பெருகும் வியாதிகள் நடுவில் ஏற்ற சுகாதார வசதிகளை அனைத்து நாடுகளும் பெற்று, சுகத்துடன், சுபிட்சத்துடன் வாழட்டும்!

தேவ வேளையில் விடுதலை...

என் கால்களுக்கும் மனதிற்கும் இடையே நித்தமும் பெரும் போராட்டம் இருந்தது. மதுபானப் பழக்கத்திற்கு முற்றுப்புள்ளியிட அநேகந்தரம் முயற்சித்தும், மாலை வேளை வந்ததும் என் கால்கள் அவ்விடங்களுக்குத் தானாகவே தீவிரிக்கும். உழைப்பின் பலன் அனைத்தும் குடியில் கரைந்தது! என்னைத் திருத்த வந்தவர்கள் தோல்வி கண்ட வேளையிலும், தொடராய் சந்தித்து, நம்பிக்கையின் வார்த்தைகளையும் நல் வசனங்களையும் ஆலோசனைகளாகத் தந்தவர் பரோட் பணித்தள ஊழியர். இயேசுவின் நாமத்தில் மன்னிப்பு – மீட்பு பெற்று, புதுசிருஷ்டியாகி, விசுவாசிகளின் ஜெப ஐக்கியத்தில் பங்கெடுக்கிறேன். இன்று என் கால்களும் மனமும் நாடுமிடம் கர்த்தரின் சபையே! அல்லேலூயா! – கோல்டி குமார், இமாச்சலப்பிரதேசம்.

இயேசுவால் ஆயிற்று...

மலைக் கிராமங்கள் பல தரிசித்தும் – சில பேயோட்டிகளின் இல்லங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டும் எனக்குள் குடியிருந்த பொல்லாத ஆவிகளைத் துரத்துவார் இல்லை! இள வயது மகளுக்கு இப்படியாயிற்றே என்ற என் பெற்றோரின் அங்கலாய்ப்புகளும் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வந்தது. எங்கும் செல்லவேண்டாம்; செலவும் செய்ய வேண்டாம்; இருக்குமிடத்தில் இருவர் மூவராக கூடி, கண்களை மூடி, இயேசுவின் நாமத்தில் கூப்பிட்டால் போதும் என்று ஊழியர் நீரீந்தர் சிங் கூறியபோது என் பெற்றோர் இறுதி முயற்சியாக இதையும் செய்யலாம் என்றனர். கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் முழங்காலில் நின்றோம். பாவ, சாப, பிசாசின் தந்திரங்களை முறியடிக்கும் வல்லமையை ஜெப வேளையில் அனுபவமாய்க் கண்டோம். வருத்தங்கள் களைந்து, விடுதலையும் சமாதானமும் எங்கள் வீட்டாரனைவரையும் பற்றியிருப்பது இயேசுவாலேயே ஆயிற்று! கோடி ஸ்தோத்திரங்கள்!

– கிரண் குமாரி, இமாச்சலப்பிரதேசம்.

கோதுமை மணிகளின் வரிசையில்

தென் ஒடிசாவின் மலைகளும் பள்ளத்தாக்குகளுமாகிய ஏற்ற இறக்கங்களில் அயராது நடந்த அந்த அழகிய பாதங்கள் ஊழியர் ஜாமேஸ்வர் ராய்தோ என்பாருடையது! 2007 அக்டோபர் துவக்கம் ஆத்தும அறுவடைப் பணியில் மிகுந்த தாகத்துடனும் தரிசனத்துடனும் பணியாற்றிய இவ்வூழியர் மூலம் 7 கிராமங்கள் கிறிஸ்துவை அறியும் அறிவுக்குள்ளாக வந்தது. 7 வேதபாட வகுப்புகளும், 2 ஆலயங்களும் அவரது ஊழிய எல்கையில் ஆவியானவரால் மலர்ந்தது. சோரா ஜனங்கள் நடுவில் 80 குடும்பங்கள் திருமுழுக்கு பெற்று திருச்சபைகளில் தேவனை மகிமைப்படுத்தி வருகின்றனர்.

மனைவி பிள்ளைகளுடன் ஜாமேஸ்வர் ராய்தா

சரீர பெலவீனங்கள், உயர் இரத்த அழுத்தம் மற்றும் காச நோயின் தாக்கத்தின் நிமித்தம் சிகிச்சை பெற்று வந்த ஜாமேஸ்வர் (வயது 44) செப்டம்பர் 5 அன்று அதிகாலை 3 மணிக்கு நித்திய இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்தார். அநேகரை நீதிக்குட்படுத்தியவர் வரிசையில் சேர்ந்திருக்கும் ஊழியர் ஜாமேஸ்வர் என்பார் ராயகடா மலைப் பிராந்தியத்தின் கோதுமை மணியாகியுள்ளார்.

மறுமலர்ச்சி கண்ட இப்பிராந்தியத்திலிருந்து புதிய புதிய ஊழியர்கள் புறப்படுதலும் சபை மலருதலும் கிராம உருமாற்றங்களும் தொடரவே தொடரும் என்பதை விசுவாசக் கண்களால் காண்கிறோம். ஊழியரின் மனைவி திருமதி ஜோதி ராய்தா அவர்களையும் ஜஸ்டின் (வயது 11), ரிதேஷ் (வயது 8) ஆகிய இரு மகன்களையும் சகல ஆறுதலின் தேவன் தமது சமாதானத்தினால் நிரப்ப ஜெபியுங்கள்.

RNI REGD. NO. RN. 45021/89 | POSTAL REGD. NO. HQ/SD/182/2021-2023 - TAMIL | DATE OF PUBLICATION 20.09.2022
LICENSED TO POST WITHOUT PREPAYMENT - PMG/TS/HQR/SC-02/WPP/2021-2023
Return Requested: VISHWAVANI SAMARPAN
1-10-28/247, Anandapuram,
ECIL Post, Hyderabad-500062.

தேவ வேளையில் தளங்களில் பிறந்த ஆராதனை குழுக்களில் தேவ வேளையில் எழும்பிய பத்து ஆலயங்கள்!

BAINSNALI, ODISHA - 12.08.22

PANASAPADI, ODISHA - 19.08.22

DUMBISAHI, ODISHA - 13.08.22

GARADU, GUJARAT - 28.08.22

BALASAHI, ODISHA - 14.08.2022

SERTHUNG PARA, TRIPURA - 03.09.22

SINGFORKA, WEST BENGAL - 14.08.22

PATICHANDRA KAMI, TRIPURA - 04.09.22

OMBANGSING, ODISHA - 17.08.22

SINDOL, ODISHA - 04.09.22

VISHWA VANI SAMARPAN - TAMIL LANGUAGE
Printed and Published by P. Selvaraj on behalf of VISHWA VANI, a registered society (Regn. No.17871 of 1987) and printed at CAXTON Offset Pvt. Ltd., 11-5-416/3, Red Hills, HYD-04. and published at 1-10-28/247, Anandapuram, ECIL Post, HYD-62. POSTING DATE: 23.09.2022. EDITOR: P. SELVARAJ.